# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி - 1969.

1989
செப்ரெம்பர்

4/50



சமய நம்பிக்கை இருக்கிறது; உடலை போர்த்தும் உடையைப் போன்று. பக். 01

தூரப் பார்வையற்ற தலைவர்கள் உள்ள வரை முடிவு - விடிவு - அடைவு தொலை விலும் இல்லை, தொங்கலிலும் இல்லை. பக். 05

அறுகோடித் தமிழ்சாதி ('ஒரு கோடி' தமக்கின்றி அகிலத்து வீதிகளை அளக் கின்ற விதியாகி. பக். 09

புதிய சமூகம், புதிய அரசியல் அமைப்பு, புதிய பொருளியல் நோக்கு என உழைத்தவர் இயேசு. பக். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

செப்ரெம்பர் - 1989

மலர்: 21 இதழ்: 07

ஆசிரியர்;
கிங்ஸ்லி ரொபட்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்
பி. ஜோசப்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./ மட். மறை மாவட்டம்.

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டு சந்தா ரூபா 50/-



## உள்ளே ...

1) எமது குரல் ... ... 1
2) மெய் அன்பைக்... ... 2
3) ஏக்கங்கள் ... ... 3
4) இளைஞர் அரங்கம் ... 5
5) அச்சுத்துறையும்... ... 6
6) கவி ஆரம் ... ... 8
7) புலவர்மணி பொறை ... 10
8) வத்திக்கான் வானொலி ... 13
9) நம்மைச் சுற்றி ... ... 14
10) அப்போஸ்தலர்பணி ... 16
11) தஞ்சைக் கவியரசர் ... 19
12) துணுக்குகள் புண்... ... 22
13) சந்தனச் சிதறல்கள் ... 23
14) நீங்கள் உலகின் ஒளி ... 25
15) விவிலியப் புதிர் ... 27

**எழுத்தாளர்களே!**

கிறிஸ்மஸ் சிறப்பிதழ் தயாராகிறது. உங்கள் ஆக்கங்களை ஒக்ரோபர் 15ம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது குரல்

## சமய உணர்வு வேண்டும்

எமது நாட்டில் பெரும்பாலான மக்கள் சமய நம்பிக்கை உடையவர்களே.

ஒவ்வொருவரும் ஏதோ ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

உலகின் பெரிய மதங்களான நான்கு மதங்களும் - இந்து, இஸ்லாம், கிறீஸ்தவம், பௌத்தம் - இந்நாட்டில் இருக்கின்றன.

இவை போதிப்பதெல்லாம் அன்பு, நீதி, மன்னிப்பு, உண்மை, சமாதானம், சகோதரத்துவம் போன்ற உயர்ந்த விழுமியங்களையே.

ஆனால், இன்று எமது நாடு என்றுமே கண்டிராத பாரிய நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறதே!

கொடூர வன்முறைச் செயல்கள், கொலைகள் இங்கு தலைவிரித்தாடுகிறதே!

ஏன்?

சமயங்கள் பொய்த்து விட்டதா?

சமய நம்பிக்கை அற்றுவிட்டதா?

இல்லை!

கோயில்களில் இன்னும் கூட்டம் சேருகிறது! கொடிகள் ஏறுகின்றன! திருவிழாக்கள் 'தூள்' கிளப்புகின்றன. பூசைகளின் மணியோசை கேட்கிறது!

ஆனால்!

சமயக் கொள்கைகள் வன்முறைச் சூறுவளியில் சிக்கி எட்டாத் தூரத்தில் பறக்கின்றன.

காரணம் என்ன?

சமய நம்பிக்கை இருக்கிறது;

உடலைப் போர்த்தும் உடையைப் போன்று. அதனைத் திருப்பலிக்கும், திருவிழாவுக்கும், அவ்வப்போது சில சடங்குகளுக்கும் போட்டுவிட்டுக் கழற்றி விடுகிறோம்.

சமய நம்பிக்கையினின்று வேர்பாய்ந்த ஆழ்ந்த சமய உணர்வு இல்லை.

ஆதலால் வன்முறையின் அசுர பலத்தின் முன்னால் எமது சமயங்கள், சமய நம்பிக்கைகள், சக்தியற்று, ஒடிந்து, வீழ்ந்து கிடக்கின்றன.

ஆகவே, இன்று நற்செய்திப்பணி அவசரத் தேவை. அது ஒரு புதிய பரிமாணத்தோடும், புதிய வீச்சோடும் நடைபெற வேண்டும்.

சமய நம்பிக்கையைக் கடந்து சமய உணர்வினை உள்ளங்களில் ஊன்றி வளர்க்க வேண்டும்.

**மலர்வேந்தன்**

---




**உமது வார்த்தையை முழுத் துணிவுடன் எடுத்துச் சொல்ல உம் ஊழியர்கட்கு அருள் தாரும்.**

*அ. ப. 4 / 29*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மெய் அன்பைக் கண்டடைய சிறியதொரு சிலுவை மனிதர்

—சுரேஷ் - அமிர்தகழி—

1984 மே மாதத்தில் வெளிவந்த (Readers Digest) "ரீடர்ஸ் டைஜஸ்ட்" ல் உள்ளத்தை உருக்கும் சம்பவமொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனி நாட்டுப்படைகள் போலந்து நாட்டைக் கைப்பற்றி அங்குள்ள அநேகரைச் சிறைக் கைதிகளாக்கிக் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்ட கைதிகளில் 10 பேர் 1941 ம் ஆண்டு June மாதம் தப்பிச்சென்றுவிட்டனர். அதனால் மிகுந்த கோபம் கொண்ட சிறையதிகாரி ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளுக்குள் அவர்கள் திரும்பக் கிடைக்காவிட்டால் அங்கு ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 600 பேரில் 10 பேரைத் தன்னுடைய இறுக்கமான விருப்பத்தின் படி தெரிந்தெடுத்து தூக்கில் போடுவதாய் அறிவித்தான். நாட்கள் கடந்து அச்சிறை அதிகாரி விதித்த 10 நாட்களும் பறந்து விட்டன. தப்பிச் சென்றவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உடனே தன்னுடைய விருப்பப்படி 10 பேரைத் தெரிந்தெடுத்தான். அந்தப் 10 பேரும் அழுதனர். அவர்களில் ஒருவரான கஜோனிஸெக் (Gajo-wniezeck) என்ற இராணுவ வீரன் "ஐயோ" என் மனைவியும் ஏழைக்குழந்தைகளும் என்ன செய்வார்கள் எனக் கதறி அழுதான். அச்சமயம் பதினொன்றுவதாக ஒரு மனிதன் முன்னால் வந்து சிறை அதிகாரியிடம் தன்னை அவனுக்குப் பதிலாக அவனுடைய இடத்தில் ஏற்றுக் கொள்ளும்படி அனுமதி கேட்டார். அதிகாரி அம்மனிதரை நோக்கி "உனக்குப் பைத்தியமா?" என்றான். உடன் "இல்லை" என்ற அம்மனிதர் "இந்த உலகத்தில் நான் தனியன் தான், அம் மனிதனுக்கோ அவனை நம்பியிருக்கும் குடும்பம் இருக்கிறது. அதனால் என்னை அம்மனிதனின் இடத்தில் ஏற்றுக்கொள்ளும்" என்று கூறினார். "நீ யார்" என இராணுவ அதிகாரி கேட்டான். "நான் ஒரு கத்தோலிக்க பாதிரியார்" என்றார். சற்று நேர மௌனத்துக்குப் பின் "சரி" என முணுமுணுத்து விட்டு அதிகாரி அந்த இடத்தை விட்டு அகன்றான்.



வருடங்கள் கடந்தன. கத்தோலிக்க பாதிரியா (Kolbe) ரின் தியாகத்தால் உயிர்ப் பிச்சை பெற்ற மனிதனைக் குறித்து கேள்விப்பட்ட "போப்" அம்மனிதனை அழைத்து சபையில் சாட்சி சொல்லக் கேட்டுக் கொண்டார். வேலையிலிருந்து ஓய்வு பெற்று, நரைத்த தலையோடு தன்மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த கஜோனிஸெக் தன் சாட்சியைக் கூறும்போது எனக்காக தந்தை கோல்பே மரித்தார், என்று உணர்ச்சி ததும்ப, கண்ணீருடன் கூறினார்.

**உதவாத எழுத்துக்கள்**

இன்றுமட்டும் அல்லாமல் என்றும் நிலைக்க வேண்டும் என்று ஓர் எழுத்தாளன் எழுதுகின்றவை எக்காலத்துக்கும் உதவியாகவே நிற்கின்றன?

பெர்னாட்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏக்கங்கள்

● ஆழியோன்

"அணுக்களில் இலத்திரன்கள் காணப்படுகின்றன. இந்த இலத்திரன்கள் அணுவின் கரு வைச்சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன. அணுவின் மையத்தில்........" விஞ்ஞான ஆசிரியர் மளமள வென்று கற்பித்துக்கொண்டு சென்றார். மாணவர்கள் பசி வயிற்றுடன், ஆசிரியர் சொல்வதனைக் கேட்பது போன்று பாவனை செய்து கொண்டிருந்தனர். நேரம் பிற்பகல் 1. 35ஐ தாண்டிவிட்டது. பாடத்திட்டத்தை முடிக்க வேண்டிய அவசரம் ஆசிரியருக்கு. வீடு செல்ல வேண்டிய அவசரம் மாணவருக்கு.

மணியடித்துவிட்டது மாணவரெல்லாம் வகுப்புக்குள் இருந்து வெளியே சிட்டாகப் பறந்தனர். அவர்களுள் முதல்வனாக ஜீவகன் முன்னே ஓடினான். மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்குச் சென்று பஸ் ஏறி, இடிபட்டு, நெரிபட்டு ஏறாவூருக்குச் சென்று அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு பின்னர் 'லக்கிக்கு' ரீயுசன் கிளாசுக்கு செல்ல வேண்டும். ஜீவகன் இன்னும் வேகமாக ஓடினான்.

'பஸ்'ஸினுள் மாணவர்கள் நிரம்பிவிட்டிருந்தனர். ஜீவகன் 'பஸ்'ஸில் நெருக்குப்பட்டுக் கொண்டு நின்றான். மேலே கம்பியை பிடிக்கவும் முடியவில்லை; பக்கத்தில் சீட்டை பிடிக்கவும் முடியவில்லை, அவனைச் சுற்றி மாணவர்கள் நின்றனர். எனவே ஜீவகனுக்கு சுவாசிக்கவும் கஷ்டமாக இருந்தது. அவன் அவ்வளவு உயரமானவனும் இல்லை மேலே அண்ணாந்து பார்த்து 'ஆவ் ஆவ்' என்று வாயால் மூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

ஒருவாறாக ஏறாவூரில் இறங்கி 'கிறவல் றோட்'டில் நடந்து வீடு சென்றடைந்தான். வீட்டில் எவருமே இல்லை' வேலைகாரப்பிள்ளை மட்டும்தான் இருந்தாள்.

'பிள்ளை, அம்மா எங்க......'? என்று அவளிடம் ஜீவகன் கேட்டான். "எதிர்த்த வீட்டு அம்மாவுக்கு உடம்பு சரியில்லை யெண்டு ஆசுப்பத்திரிக்கு கூட்டிப் போயிருக்காவு ..' என்ற அவள் ஜீவகனிடம் சொன்னாள்.

ஜீவகனுக்கு ஆத்திரமாத்திரமாய் வந்தது "எப்ப பாத்தாலும் அவவுக்கு ஊர் வேல தான் வீட்டில கொஞ்ச நேரமெண்டாலும் நிக்க ஏலாதா அவவுக்கு " என்று சத்தம் போட்டு ஏசினான். வேலைக்காரப்பிள்ளை அவனைச் சமாளிக்க முயன்றாள். 'தம்பி சோத்தப் போட்டுத்தாறன் சாப்பிடுங்க' என்று சொன்னாள்,

"எனக்கு சாப்பாடும் வேணும் கீப்பாடும் வேணும். நீ உன்ட வேலயப் பார். அம்மாவெண்டு இருக்காவு ஒரு நாளெண்டாலும் எனக்கு சோறு போட்டு தந்திருக்காவா ?" என்று சத்தமிட்டவாறு பானை, சட்டிகளை உலக்கையால் அடித்து உடைத்தான். பின்னர் விம்மி, விம்மி அழுதான்; தலையைச் சுவரில் மோதி மோதியழுதான். பின்னர் சாப்பிடாமலேயே ரியூட்டறிக்குச் சென்றுவிட்டான்.

அன்று ரியூட்டறியில் பொது அறிவுப்போட்டி நடந்து கொண்டிருந்தது. ஜீவகன் நன்றாகப் பதிலளித்துக் கொண்டிருந்தான். அவனால் அவனது குழுவுக்கு புள்ளிகள் கிடைத்துக் கொண்டிருந்தது.

"எந்த நாட்டின் முத்திரைகளில், அந்த நாட்டின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை ... ?" அறிவிப்பாளராக கடமையாற்றிய ஜெயா மாஸ்டர் கேட்டார்.

'இங்கிலாந்து...' என ஜீவகன் துடித்துப் பதைத்து விடையளித்தவன், அப்படியே மயங்கிச்சரிந்து விழுந்தான். "சரியான விடையைச் சொல்லிவிட்டார்" என்று கூறிய அறிவிப்பாளர் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

போட்டியெல்லாம் முடிந்து பிள்ளைகள் எல்லோரும் வீடு சென்று விட்டனர். ஜீவகன் மட்டும் ரியூட்டறியில் நின்றான். மாஸ்டர்தான் சைக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ளில் கொண்டு சென்று விடுவதற்காக அவனை நிற்கச் சொன்னார்.

''வா ஜீவகன் வீட்ட கொண்டு விடுறன்... இப்பவும் என்னவும் செய்யுதா...'' என்று ஜெயா மாஸ்டர் கேட்டார்.

''எனக்கு இப்ப எல்லாஞ் சரி சேர்... வீட்ட போகத்தான் விருப்பமில்ல சேர்...'' என ஜீவகன் சொன்னான். மாஸ்டருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என அவர் கேட்டார்.

''அங்க இருக்க எனக்கு விருப்பமில்லை சேர்... அப்பா காலம வேலைக்குப் போனால் இரவிலதான் வீட்டுக்கு வருவார். சரியாக குடிச்சிட்டுத்தான் வருவார். அம்மா வீட்ல நிக்கிறதே இல்லை... ஊர் வேலதான் அவவுக்குப் பெரிசு, அவட கையால எனக்கு ஒரு அகப்ப சோறு கூட போட்டுத் தாற இல்லை. வேலைக்காரப் புள்ளதான் சமச்சி வைப்பாள். அத அவள் தான் போட்டுத் தருவாள். எனக்கு சகோதரர்களும் இல்ல... வீட்ட போகவே விருப்பமில்ல சேர்.'' மளமளவென்று சொல்லி முடித்தான்.

மாஸ்டருக்குத் துக்கமாகப் போய்விட்டது. எவ்வளவு கெட்டிக்காரப் பையன். எவ்வளவு கவலைகளை மனதில் சுமந்து கொண்டு இருக்கிறான். ''சரி ஜீவகன், நீ இண்டைக்கு வீட்டுக்குப் போ... நான் வந்து உன்ட அப்பா, அம்மாவோட கதைக்கிறன். இனி எல்லாம் சரியாகிப் போயிடும். ஏறு சைக்கிளில்...''

## சிறுகதை

ஜீவகன் அமைதியாகச் சைக்கிளில் ஏறி இருந்தான். மாஸ்டரும் அவனும் சென்ற போதும் வீட்டில் வேலைகாரப் பிள்ளை மட்டுமே இருந்தாள்.

சரி ஜீவகன் நான் போயிற்று வாறன். நாளக்கி வீட்ட வந்து கதைக்கிறன். சாப்பிட்டு போட்டு படு...'' என்றார் மாஸ்டர்.

''சரி சேர்''

மறு நாள் ஜெயா மாஸ்டர் ஜீவகன் வீடு சென்று அவர்களின் பெற்றோருக்குவிடயத்தை விளங்கப்படுத்தினார். அவர்கள் மாஸ்டரின் விளக்கத்தைக் கேட்டுவிட்டு அவன செய்வதாகக் கூறினர்.

நாட்கள் சில சென்றன. ஜீவகன் வழக்கம் போல் ரியூசனுக்கு வந்து போனான். மாஸ்டரும் பழைய சம்பவங்களை மறந்து போய் விட்டார். ஒரு நாள் மாஸ்டர் ஆறுதலாக இருந்து மாணவர்களின் அப்பியாசப் புத்தகங்களை திருத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பையன் வேகமாக ஓடி வந்து அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ஜெயா மாஸ்டர் அதனை நிதானமாக வாசித்தார்.

அன்பின் சேர்,

நீங்கள் அன்று வீடு வந்து சென்ற பின்னராவது அப்பாவும், அம்மாவும் திருந்துவார்கள் என எதிர் பார்த்தேன். ஆனால் அவர்களில் எவ்வித மாற்றமும் இல்லை. எல்லாமே பழையபடிதான். எனது வகுப்பில் என்னுடன் படிப்பவர்கள் கள் எல்லாம் 'என்ட கொப்பிய அம்மா பார்த்தவ. பிழை வாங்கினதுக்கு ஏசிப்போட்டாவு' அல்லது 'நான் சரி வாங்கினதுக்கு பாராட்டினார்கள்' என்றெல்லாம் சொல்லும் போது எனக்கு மிகவும் ஏக்கமாக இருக்கும். எனது கொப்பியை யார்தான் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள்? எனக்கு ஒரு சோடி உடுப்புத்தான் உண்டு, நானே கழுவி உடுத்திக் கொள்வேன்.

இவையெல்லாவற்றையும் தவிர, இப்போது அம்மாவும் அப்பாவுடன் சேர்ந்து குடிக்கின்றா. எனக்கு உடன் பிறப்புக்கள் இருந்தாலாவது என்கவலைகளை பகிர்ந்து கொள்வேன். ஆனால் அதுவும் கிடையாது, என் ஏக்கங்கள் எல்லாம் யாராவது என்னை அன்பு செய்ய வேண்டும் என்பதே, அது நிறைவேறவே யில்லை.

எனவே சாவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் சேர்.

அன்புடன்
ஜீவகன்

கடிதத்தை வாசித்தமாஸ்டர், உடனே ஜீவகனின் வீட்டுக்குச் சென்றார் அங்கு''என்ட செல்ல மகனே நீ போயிட்டியா... ?'' என்ற ஜீவகனின் அம்மாவின் அழுகுரல் மாஸ்டரை வரவேற்றது.

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இளைஞர் அரங்கம்

## புறக்கோலம்

★ சமுதாயத்தை வழி நடத்துவோரிடம்,
★ நிறுவனங்களை நிர்வகிப்போரிடம்,
★ குழுக்களை ஆற்றுப்படுத்துவோரிடம்,
★ அமைப்புக்களை இயக்குவோரிடம்,
★ அரசாங்கங்களை ஆள்வோர்களிடம்,

தூய்மையான தியாக சிந்தையும், உயரிய நோக்கும் இன்மையே அனைத்துப் பிரச்சினைகளுக்கும், பிளவுகளுக்கும், கொலைகளுக்கும், கொடூரமான செயல்களுக்கும், ஆள் - பொருள் கடத்தல்களுக்கும், புலவந்த செயற்பாடுகளுக்கும், காரணங்களாக அமைகின்றன.

தொடங்குகின்ற பணியில் அடைவை நிலை நிறுத்துவதை விட்டு, பணிகளின்போது அவற்றை நடத்துவோர் அவற்றில் சம்மந்தப்படுவோர் உடலியற் தேவைகளின் மட்டிலும், காப்பு, கணிப்பு சூழ்நிலைகளிலும் நிறைவு பெற விரும்புவதனாலேயே அடைவு பின்னடைகின்றது. பின் செல்வோர் மடுவுக்குள்ளும், தீக்குள்ளும் வீழ்ந்து மடிகின்றனர்.

தூரப் பார்வையற்ற தலைவர்கள் உள்ளவரை முடிவு - விடிவு, அடைவு தொலைவிலும் இல்லை, தொங்கலிலும் இல்லை.

தன்னை, தன் பெயரை, தமது குரங்குப் பிடிக்கொள்கைகளை மாத்திரம் நிலைநிறுத்த விரும்பும் தலைவர்கள் உள்ள எந்த ஒரு குழுவும், அமைப்பும் நிலைப்பதுமில்லை, அது தமது அடைவை எட்டுவதுமில்லை.

தாம் மட்டுமல்ல, தமது சமூகம், மொழி, நாடு, மக்கள் தமக்குப் பின்னரும் - பின்னராவது உண்மை ஒளியை, விடிவை, உரிமை வாழ்வை, உயரிய நிலையை எய்த வேண்டும் என்று விரும்புவார்களாயின், பிடிவாதத்திலிருந்து இறங்கி கருத்து வாதத்தில் கலந்து, தமது சகோதரர்களுக்கிடையேயும், சக அமைப்புக்களுக்கிடையேயும், இடம் பெறும் மோதல்களையும் - பழிவாங்கல்களையும் நிறுத்துவார்கள் என நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

இவற்றை எப்பொழுது எமது தலைவர்களும், குறிப்பாக இளைஞர்களும் உணர்கின்றார்களோ அக்கணப் பொழுதிலிருந்தே,

அயலவர்களையும் அன்பு செய்வோம்,
வாய் விட்டு உண்மைகளைப் பேசுவோம்,
உரிய தேவைகளை நிறைவு செய்வோம்,
உரிமைகளுடன், சமாதானமாக வாழ்வோம்,
உறவுகளை வளர்ப்போம்
நிம்மதியாக உறங்குவோம்,

என அன்புக்குரல் கொடுப்பது.

**கலையுலகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ச்சி - 2

# அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும்

இலங்கையின் பத்திரிகைத் துறை வளர்ச்சியில், சுத்தோலிக்க திருச்சபையும் அதிகம் ஆர்வம்காட்டியிருந்தமையையும் மேலும்குறிப்பிட வேண்டும். 1879 லிருந்து 'MESSNGER' எனும் ஆங்கில வார இதழ் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து சத்தியவேத பாதுகாவலன் எனும் தமிழ் வார இதழ் வெளியிடப்பட்டது. இது இன்று பாதுகாவலன் எனும் தலைப்பில் வாராந்தம் யாழ்நகரிலிருந்து வெளிவருகின்றது.

இவற்றைவிடத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு 1945 காலப் பகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. நடேசஐயர் 'வீரன்' எனும் சஞ்சிகையை வெளியிட்டதையும் குறிப்பிடவேண்டும்.

**எமது தேச வெளியீடுகள் :**

தமிழ் மொழியிலான நாளாந்த புதினப் பத்திரிகைகளில், தினகரன், வீரகேசரி, தினபதி முக்கியத்துவம் பெறுகின்றன. இன்னும் தினகரன் சில இலட்சம் பிரதிகளை விற்பனைப் படுத்த முடியாது இருப்பதாக அறிகின்றோம். வாராந்த வெளியீடுகளில் சிந்தாமணி முக்கியத்துவம் பெறுகின்றது. இது ஒரு மறுபதிப்புக்களைக் கொண்டதாகவே பெரும்பாலும் அமைந்து விடுகின்றன. அதாவது புராதன நூல்கள், கலைச் செல்வங்களிலிருந்து, சேகரிக்கப்படும் உண்மைகள், மரபுகளையும், வெளிவந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகளையும் இது உள்ளடக்குகின்றது. இதில் வெளிவரும் சில அரசியல் ஆய்வுக் கண்ணோட்டங்கள் வரவேற்கத்தக்க விடயதானங்களாக அமைந்து விடுகின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும்.

தினகரனைப் பெருமளவில்முஸ்லீம்மக்களும் வீரகேசரியை பெருமளவில் தமிழ் மக்களும் வாசிப்பதனையும் நாம் அவதானிக்கிறோம். இதற்கு அப்பத்திரிகைகள் கொண்டுள்ள செய்திகள், கட்டுரைகள், சூழல், பொருளாதார அடிப்படையில், ஒரு குறிக்கப்பட்ட மக்களது, சமய, அரசியல், கலாச்சார அம்சங்களைப் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால்தான் இவற்றைஒவ்வொரு இனமக்களும் தேர்வு செய்கின்றனர். தினபதி ஒரு பொதுக்கணிப்புக்குரிய புதினப்பத்திரிகையாயினும் கட்சியினடிப்படையில் இது சார்ந்த தமது கருத்துகளை வெளிப்படுத்துவதனால், இதனையும் ஒரு குறிக்கப்பட்ட வகுப்பினர், மக்கள் தொகுதியினர் படிக்கின்றனர்.

**எஸ். லோகநாதன்**

எமது நாட்டில் ஏனைய சிங்கள, ஆங்கிலப் புதினப்பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது, எமது தமிழ் புதினப்பத்திரிகைகள் இன்றும் தவழும் பருவத்திலேயே உள்ளன எனலாம். பத்திரிகைகளில் கையாளும் வெளிப்பாடு, ஒழுங்கமைப்பு, வர்ணங்கள், நிழற்படங்கள், ஆகியனவற்றுடன் ஒப்பிடும் போது சிங்கள, ஆங்கில மொழியிலான பத்திரிகைகள் துரித வளர்ச்சியை அடைந்துள்ளன எனலாம்.

இதுவே எமது தமிழ் சஞ்சிகைகளின் மட்டில் காணப்படும் பிரதான குறைபாடாகவும் விளங்குகிறது என்பதை இவ்விடத்திலேயே குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

**ஒரு மனிதன் உலகத்தில் வாழ்ந்தான் என்பதற்கு அவன் ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும் அல்லது ஒரு மனைவியாவது பெற்றிருக்கவேண்டும் அல்லஒருநூலாவது எழுதியிருக்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இத்தகைய நாளிதழ்களை விட்டு, குறிப்பாக எமது தமிழ் மொழியிலான சஞ்சிகைகளைப் பற்றித் திறனாய்வு செய்தல் எமது கட்டுரைக்கு அதிக விடயங்களைப் பெற்றுத் தரும் எனக்கருதுறோம். இதனால் திறனாய்வுக்கும், அடையாளப்படுத்திக் காட்டவும், இங்கு சில சஞ்சிகைகளை உங்கள் முன்வைப்பதற்கு விரும்புகின்றேன்.

★ 'தலையளி' இது காலாண்டு வெளியீடு - கல்லாறு வை. எம். சீ. ஏ. வெளியிடுகின்றது.

★ 'நன்றி' - இதுவும் காலாண்டு வெளியீடு- கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளியிடுகின்றது.

★ 'செம்மை' இதுவும் காலாண்டு இதழ் - இதனை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி வெளியிடுகின்றது.

★ 'முனைப்பு' இது தனிப்பட இரு எழுத்தாளர்களால் வெளியிடப்படுகின்றது.

★ 'சுகந்தம்' நான்கு மாதங்களுக்கு ஒரு இதழாக வெளிவருகின்றது. கல்லாறு ரோசாலயா வெளியிடுகின்றது.

★ 'வியூகம்' - இது கல்முனை வியூகம் கலை கலாச்சாரக் குழுவினரால் வெளியிடப்படுகின்றது.

★ 'தொண்டன்' இது மாதாந்தம் வெளியிடப்படும் கிறிஸ்தவ இலக்கிய இதழ்- இதனை திரு. மட், மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் வெளியிடுகின்றது.

மேல்வந்த அனைத்தும் மட்டக்களப்பு, கல்முனைப் பிரதேசங்களிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் என்பதை நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். இவற்றைவிட எமது ஆய்வில் வேறு சில பிரதேசங்களிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளும் வேண்டியபோது திறனாய்வுக்குக் கவனத்திற் கொள்ளப்படும் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

(தொடரும்)


## நீங்காத நினைவானாய்

**திருமதி மரியசெல்வம் செல்லக்கா யோசேப்**

**அவர்களின் விண்ணக வாழ்வின் ஈராண்டு**

**நினைவு: 24-09-89**

மலர்வு 18 — 09 — 1919



உதிர்வு 24 — 09 — 1987

அன்பின் சிகரமாய், ஆற்றலின் உறைவிடமாய், மனையது சிறக்க எங்கள் மாண்பினை ஒளிரவைத்த இணையில்லாச் சுடர் விளக்கே! சுடர் அணைந்து ஈராண்டானாலும் எங்கள் ஆற்றொண்ணாத் துயரம் நீங்க ஆறுதல் கூற யாருமிலர். எங்கள் வேண்டுதல் அனைத்தும் விண்ணக வாழ்வில் நீங்கள் என்றும் இன்புற்றிருக்கவே.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 23 - 09 - 89 காலை 6 - 00 மணிக்கு மட்/புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

துயருறும்

**கணவர் P. M. யோசேப், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றுரும், உறவினரும்**

46, பழைய வாடி வீட்டுத்தெரு
கோட்டைமுனை,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்பு எங்கே?

பாவலர் பாநா

'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாள்' என்று சொன்ன
அப்பாவிப் புலவன் இன்று அகப்பட்டால் அதோகதிதான்,
என்பெல்லாம் உடைந்திருக்கும், எத்தர்கள் அன்பில்லாமல்
எதையெதையோ செய்திருப்பார், ஏனென்ன யாரும் இல்லை.
வன்செயல்கள் புல்லைப்போல் வளர்ந்துவரும் உலகமதில்,
அன்பெங்கே ஒளிந்ததுவோ, அதைத்தேடி அலைகின்றோம்;
துன்பங்கள் அலைஅலையாய் தொடர்ந்துவரும் நாட்கள் இவை;
அன்பதுவும் இதயங்களில் அணைந்துதான் போயிற்றோ?

புத்தர்பிரான் போதித்த புனிதவழி மறந்தனரோ
பூவுலக மக்கள் எல்லாப் புண்ணியமும் துறந்தனரோ;
சத்தியத்தை அனைவருக்கும் சாற்றிய நல் நபி வாக்கு,
சகலருமே கடைப்பிடிக்க சனங்கள்தான் தயங்கினரோ;
எத்தலத்தும் எவ்வுயிர்க்கும் அன்பே அச்சாணி என்ற
ஏசுபிரான் திருமொழியை ஏளனமே செய்தனரோ;
பக்திநெறி நாம் செல்லல் பகவானின் ஆசை என்ற
பரந்தாமன் கீதைதன்னை பாருலகோர் ஒதுக்கினரோ;

மக்களது இதயத்தில் இடம் தனக்கு இல்லையென்று
மனதார அன்புகண்டு, மனம்கசிந்து நீர்சிந்தி,
துக்கமது கொண்டு, வேறே தூயவர்கள் வாழுமிடம்
துரிதகதி ஓடிற்றே, துரத்திவிட்டார் மானிடர்கள்;
பக்கமெலாம் கோபதாபம், பார்க்குமிடம் வெறுப்புணர்வு;
பாரெங்கும் பதட்டநிலை, பயங்கரங்கள் ஓயவில்லை.
இக்கதியா அன்பதற்கு இனிக்கதியே வேறில்லையா,
இருளதிலும் முயன்றன்பை, எங்கிருந்தும் வெளிக்கொணர்வோம்

# வாழ்ந்திடுவோம்

○ சின்னத்தம்பி உதயகுமார்

ஆயிரம் விதைகளை அள்ளி விதைத்தான்
அங்கே ஓர் உழவன்
அத்தனை விதைகளும் சிதறி விழுந்தன
பூமி எங்கணுமே
பாதையில் விழுந்த விதைகளை எல்லாம்
பறவைகள் தின்றனவே
பாறையில் விழுந்த விதைகள் எல்லாம்
பயனற்றுப் போயினவே
முட்புதர் உள்ளே விழுந்தவை முளைத்து
முள்ளாலழிந்தனவே
முளைத்து வளர்ந்து பயனைத் தந்தன
வயலில் விழுந்தவையே
வயலில் விழுந்த விதைகளைப் போல
மக்கள் வாழ்க என்றே
மாந்தருள் தெய்வம் ஏசு மொழிந்த
மொழிப் படி வாழ்ந்திடுவோம்

# ஐயோ! தமிழா..!

○ நிலாதமிழின்தாசன்

முத்தமிழர் மத்தியிலே! பத்தாயிரம் பிரிவோ?
மோதி மடிகின்ற இவர் வாழ்வெல்லாம் பெருஞ்சரிவு
வித்தாரம் பேசுமிவர் வேற்றுமையில் முழுவடிவம்
வீணுகத் தம்முடைய சக்தியெல்லாம் மாய்க்கின்றார்.

கண்ணிருந்தும் குருடரெனக் காலிடறி வீழ்கின்றார்
''கட்டுமரம்'' தனையறுத்து நட்டாற்றில் மூழ்குகின்றார்
எண்ணிக்கை யில்லாத இழப்புக்களைச் சுமந்திருந்தும்
இணைந் தொன்று கூடாமல் பிரிந்தழிந்து சாய்கின்றார்

உயிர் குடிக்கும் எதிரியினை ஊதிப் பெருக்க விட்டு
உடன் பிறப்பின் தலை கொய்து வடம் கோர்த்து மகிழ்கின்றார்
வயல் படர்ந்த களைபிடுங்கும் வனப்புதனைக் கைகழுவி
வருந்தாது தினந்தோறும் பயிர் வேரை அறுக்கின்றார்

தளையறுத்துத் தலைநிமிரப் படையணியை நிலை நிறுத்தி
தனையழிக்க வழி வகுத்து அணிசிதைத்துப் பிணியானார்
விளைதற்கு முன்னலே வேலியினைத் தாம் பிடுங்கி
வீணுக்கி அதம்பண்ணி வேதனையைச் சுமக்கின்றார்

அறுகோடித் தமிழ்சாதி ''ஒரு கோடி'' தமக்கின்றி
அகிலத்து வீதிகளை அளக்கின்ற விதியாகி—
முறிபட்டும், ஒன்ருக முறுகாத தும்பாகி
முறை கெட்டார். ஐயகோ! முடிவுக்கே ஆளானார்

## விவிலியம்

அன்பிறை வாக்கெமக்கு
அருள் நிறை வரம் தரவே
ஆன்ம வாழ்வளித்து நிற்கும்
ஆவிக் குயிர் அளித்து என்றும்
இறையருள் எமில் வளர
இணையடி நாம் தொடர
ஈவதெம் விவிலியம் தான்
ஈசனும் யேசுவைத்தான்
உலகு வாழ் மக்களெல்லாம்
உணர்ந்திட வழி சமைக்கும்
ஊழியம் புரிய வென்று
எளிர்ச்சியோ டெமையழைக்கும்
எளியவர் உயர்வு காண
ஏற்றமாம் ஏணியாகும்
ஏழையை வாழவைக்கும்
ஐயனும் யேசு வாழ்வு
ஐயமே அகற்றி நிற்கும்
ஒளியருள் எமக்கருளி
ஒற்றுமை கற்றுரைக்கும்
ஓங்கிடும் ஒளிச்சுடராம்
ஓசை சங்கீதமுமாய்
ஔடத மெம் ஆன்ம நோய்க்கு
அருந்துவீர் ஆவலோடு

செல்வி. T. பத்மா
தினகரன் வீதி
பாண்டிருப்பு - 1
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலவர்மணி பொறை

அன்புமணி

பாரதி என்ற மகுடம் மகாகவி சுப்பிரமணிய பாரதிக்கு அமைந்ததுபோல் "நாவலர்" என்ற மகுடம் ஆறுமுகநாவலருக்குப் பொருந்தியதுபோல புலவர்மணி என்ற புகழ் நமது புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுடன் ஒன்றிவிட்டது.

நமது காலத்தில் வாழ்ந்த பாவலர்களுள் சங்ககாலப் புலவரைப்போல், பல்லவர்காலப் புலவரைப்போல் தமிழ் விருந்து படைத்தவர் புலவர்மணி. எளிமை, அதே சமயம் பண்டிதர்களின் புலமை, இரண்டும் அவர் கவிதைகளில் இணைந்தன. தமிழைப் பாடியபோதும் தமிழ் மக்களைப் பாடியபோதும் தாய்நாடு என்ற தேசிய உணர்வு அவர் இதயத்தை விட்டு அகன்றதில்லை.

"இலங்கை மணித்திரு நாடே - இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே"

என்று பாடியவர் இறுதிவரை அக்கொள்கையைக் கடைப்பிடித்தார்.

மகாகவி பாரதியின் உள்ளத்தில் தமிழ் உணர்வு, தமிழ் இனம், தமிழ் நாடு என்ற தவிப்புகள் நிறைந்திருந்தபோதும், தாய்நாடு பாரத தேசம் பாரத மக்கள் என்பதே அவர் இதயத்துடிப்பாக இருந்தது.

முப்பதுகோடி மக்களும் வாழ்வோம் - இன்றேல்
முப்பதுகோடி மக்களும் வீழ்வோம்

என்பதே பாரதியின் சிந்தனையாக இருந்தது.

அதைப்போலவே புலவர்மணியின் இதயத்திலும் ஈழமணித்திருநாடு, ஈழநாட்டு மக்கள் என்ற எண்ணமே நிறைந்திருந்தது. இதனால் தானோ என்னவோ, பாரதியின் தேசியப் பாடல்களுக்கும் புலவர்மணியின் தேசியப் பாடல்களுக்கும் நிறைய ஒற்றுமை காணப்படுகிறது.

இத்தகைய ஒரு மாகவிஞன் குறுகிய இன, பிரதேச எல்லைகளைக் கடந்து தேசிய மட்டத்தில் - அதற்கும் அப்பால் உலகளாவிய வட்டத்தில் போற்றப்படவேண்டும்.

அதற்கு இவரது தமிழ்ப்புலமை அருகதை உள்ளதா? - பார்ப்போம்.

வெண்பாவிற் புகழேந்தி என இருந்த வழக்கைத் தொடர்ந்து வெண்பாவிற்கோர் புலவர்மணி என்று கூறும் அளவிற்கு வெண்பா பாடுவதில் தன்முத்திரையைப் பதித்த புலவர்மணி, எத்தனையோ வகைகளில் நூலுருவம் பெற்றுவிட்ட பகவத்கீதை மூன்று யோகங்களையும் தானும் வெண்பாவாகவே பாடி ஏற்கனவே உள்ள இரண்டு பகவத்கீதை வெண்பா நூல்களையும் விஞ்சும்படி செய்துவிட்டார்.

பகவத்கீதையின் சாரத்தை சாதாரண மக்கள் புரிந்துகொள்வது சிரமம். எத்தனை பகவத்கீதை நூல்களைப் படித்தாலும் சரியான விளக்கம் இல்லாவிட்டால் அது வெறும் புத்தகப் படிப்பாகவே இருக்கும். ஆனால், புலவர்மணி தந்த பகவத்கீதை வெண்பா எளிய தமிழில் சாமானியனும் இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

கடமை தன்னை விட்டுக் கலங்கி நின்ற பார்த்தன்
திடமடையக் கண்ணபிரான் தேற்றி - உடலுயிர்கள்
இத்தகைய ஞானமிது, யோகமிது என்றுபதே
சித்தபொருள் கீதைத் தெளிவு.

உறுகின்றாய் துன்பம் உறத்தகார்க்காய் நீ
அறிவுரையும் சொல்கின்றாய் அப்பா - முறையன்று
இறந்தார் பொருட்டும் இருந்தார் பொருட்டும்
அறிந்தார் கலங்கார் அலன்று

கந்தைத் துணியைக் களைந்தே புத்தாடையொரு
மைந்தன் உடுக்கும் வகைபோல - இந்த உயிர்
நைந்த உடல் நீத்தருளாய் நண்ணும் புது உடல்கள்
முந்தவடைந்தெய்தும் முனைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கீதைத் தெளிவு பெறுவதற்கு பாதைகாட்டும் பாடல்கள் இவை.

புலவர்மணியின் நூற்றுக்கணக்கான பாடல்களிலே சிலவற்றை உள்ளடக்கிய ''புலவர்மணி கவிதைகள்'' என்ற நூல் 1980ல் வெளிவந்தது. ஒவ்வொரு வகைப் பாவிலும் புலவர் மணியின் ஆற்றலுக்கும் புலமைத் திறனுக்கும் கவிநயத்திற்கும் மாதிரியாகக் கொள்ளக்கூடிய கவிதைகளை நாம் இந்நூலில் காணலாம்.

இந்துமகா சமுத்திரத்தின் நடுவில் ஈங் கோர்
இங்கிலாந்நமைந்து கிடந்ததுவோ என்ன
முந்துசீர் நாகரிகம் பழக்கம் வாழ்வு
மொழிப்பயிற்சி கலையுணர்ச்சி முழுதும் மாறி
பந்தமுறு வெறும்போலி பகட்டில்மோக
பட்டுப்பாழ் பட்டாவி பதைத்து வீழ்ந்து
சிந்தனையற்றிடுமி லங்கா தேவி உள்ளம்
தேசிய மயமாகத் திகழ்வதென்றோ.

புலவர்மணி வாழ்ந்த காலத்து மக்களின் அந்நிய மோகத்தை அங்கதச் சுவையுடன் கிண்டல் செய்தாலும் அவர் இதயத்தின் அடித்தளத்தில் புதைந்து கிடக்கும் வேதனை மேலெழுவதையும் இக்கவிதையில் நாம் காணலாம்.

மட்டக்களப்பைப் பற்றிய ஒரு பாடல் வருமாறு.

செஞ்சாலி விளைவேலி ஆயிரமூர் புரக்கும்
திருவோங்கி நிறைவுடைய செல்வ மெலாம் சுரக்கும்
அஞ்சாயல் மடவார்கட் கறநெறியே பெருக்கும்
அமர்விருந்தின் உபசாரம் எவர் மனமும் உருக்கும்
துஞ்சாமல் இரவு பகல் மள்ளர்குரல் கலிக்கும்
சுவாமி விபுலானந்தர் யாழ் இசை நின் றொலிக்கும்
மஞ்சாடும் பொழில்மட்டு மாநட்டின் இனிய
மண்வளம்போல் வாழ்வார்க்கு மன வளமும் இனிதே

கவிதைக்கு விளக்கம் வேண்டியதில்லை அல்லவா?

புலவர்மணி அவர்களை ஒரு மகா கவிஞனுகக் கண்டவர்களுக்கு அவர் ஒரு சிறந்த நகைச்சுவையாளர் என்ற செய்தி வியப்பைத் தரும். ஆனுல் அவருடன் பழகிய அனைவரும் புலவர்மணியின் நகைச்சுவையை நிறைய அனுபவித்து உள்ளனர்.

அவர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் (தற்போது மட்டக்களப்பு இந்துக் கல்லூரி) தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது அங்கு அதிபராக இருந்தவர் கந்தையா என்னும் சிறந்த கல்விமான். ஆனுல் மிகவும் கண்டிப்பானவர். இதனுல் ஆசிரியர் மத்தியில் அவர் வெறுப்புக்குள்ளாகியிருந்தார். (இயல்பு தானே!) அவரை நையாண்டி செய்யும் முகமாக கந்தையர் என்றும் கார்பன் (கருநிறும்) கந்தையர் என்றும் ஆசிரியர்கள் அவரைக் குறிப்பிடுவது வழக்கம். அச்சந்தர்ப்பத்தில் புலவர்மணி பாடிய நையாண்டிக் கவிதை இது.

சட்டமென்பது வேசரியேயதைத்
தழுவி நிற்பது வேசரியிட்ட
சட்டமென்பர் அகந்தைய ரேயதைத்
தாங்குவோர் பழங் கந்தைய ரேயன் பாய்க்
கிட்டவந்து நற்பண்போடு வாழ்வரேல்
கிட்டும் நன்மையல் லாவிடி லோசட்டி
சுட்டதும்கையை விட்டது மாய்விடும்
தொல்லையே யதற் கெல்லையு, மில்லையே

## பயணத்தின் போது வாந்தியா?

கார் பயணம், பஸ் பயணம் செய்பவர்களில் சிலருக்குக் குமட்டல், வாந்தி, வயிற்றுக் கோளாறுகள் உண்டாவதாகச் சொல்கிருர்கள். எலுமிச்சம் பழச்சாற்றுடன் தேன்கலந்து சாப்பிட்டால் இந்தக் கோளாறுகள் உண்டாகாது. எலுமிச்சம் பழத்தை முகர்ந்தாலே போதும் பிரயாணத்தில் உண்டாகும் குமட்டல், வாந்தியைத் தடுக்கலாம். எலுமிச்சம் பழத்தை இரண்டாக அறுத்து ஒரு பாதியில் சக்கரையைத் தூவி ருசித்தாலே போதும் குமட்டல் வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இக்கவிதையில் சிலேடை நயம் நிறைந்து வழிவதைச் சுவைஞர்கள் காணலாம். சட்டமென்பதுமே - சரி. அதைத் தழுவி நிற்பதுவே சரி என்பதும், சட்டம் என்பது - வே சரி (கழுதை) அதைத் தழுவிநிற்பது - வேசரி (கழுதை, என்பதும் எத்தகைய சிலேடை நயங்கள்! அதைப்போலவே சட்டமென்பரகந்தையா (கந்தையா - அகந்தையா) அதைக் தாங்குவோர்) பழங்கந்தையைப் போன்றவர்கள் - பழைய காலத்துக் கந்தையா) இப்படி சிலேடை நயம் நிறைந்த கவிதைகளை அவ்வப்போது யாத்து உடன் இருப்பவரை மகிழ்விப்பவர் நமது புலவர்மணி.

இதை நோக்கும்போது பழைய காலத்து இரட்டைப்புலவர்கள், ஒட்டக்கூத்தர் ஔவையார் போன்றோரது சிலேடைப் பாடல்கள் நினைவுக்கு வருவது இயல்பே.

புலவர்மணி அவர்களின் கவிதைப்பரப்பு ஒரு பெருங்கடல். அதில் இரண்டொரு துளிகளை மட்டுமே தந்தோம். கடலில் முக்குளித்து விளையாடுவதும் மூழ்கித் திளைப்பதும் சுவைஞர் சுதந்திரம்.

'புலவர்மணி கவிதைகள்' என்ற நூலில் நாடும் மக்களும், குருவணக்கம், தமிழ்மொழியும், தமிழ்ப்புலவரும். "சான்றோர், கடவுள் வணக்கம், தனிப்பாக்கள், சிந்தனைச் சிதறல்கள் போன்ற வெவ்வேறு பகுப்புகளில் புலவர்மணி கவிதையின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தைத் தரிக்கும் வாய்ப்பு சுவைஞர்களுக்கு உள்ளது.

இறுதியாகப் புலவர்மணியின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் ஒரு பாடல்.

தீதகன்று நன்மையெலாம் செழித்திடுக
வென்றே இத்திருநாள் தன்னில்
சூதுடனே வாது கொடுஞ் சூழ்ச்சி இருள்
தொலைந்திடுக மக்கள் வாழ்வில்
மாதுயரம் வாராது காத்திடவே
மனவுறுதி கொள்க மாறாய்
ஏதுதடை வரினும் அவை யெதிர்த்து
வெல்வே
மெனச் சபத மின்றே செய்க.

## பார்த்திபனுக்குப் பதில்

# துருவலில் விழுந்த சொட்டு

○ செ. குணரெத்தினம்

தொண்டன் ஜூன் இதழில் இரவலும் துருவலும் பகுதியில் 10 வருடம் என்ற தலைப்பில் செ. குணரெத்தினம் எழுதிய குறிப்புகளுக்கு ரகவெலயைச் சேர்ந்த க. பார்த்திபன் அவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தார். தொண்டன் ஜூலை இதழில் இது பிரசுரமானது. அதற்கு செ. கு. எழுதும் பதில் இது. இவ்விவகாரத்தை இத்தோடு முடித்து வைக்கின்றோம்.

இ. ஆ.

இலக்கியத்தின் எல்லா வடிவங்களிலும் நாம் முன்னுக்கு வந்து விட்டோமென்று நீங்கள் பெருமைப்பட்டால் ~~அந்தப் பெருமைப்பட்டால்~~ அந்தப் பெருமை எனக்கும் வராதா என்ன? நான் என்ன சொல்ல வந்தேன் என்பதை நீங்கள் புரிந்ததை கடிதமூலம் கண்டு மகிழ்ந்தேன்.

தங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் வேளையில் நம்மில் பலர் இன்னும் தாங்கள் சுட்டிக் காட்டிய தமிழ்நாட்டு எழுத்தாளர்களைத்தானே எடுத்தற்கெல்லாம் தூக்கிக் காட்டுகிறார்கள் நமது நாட்டு எழுத்தாளர், கவிஞர்களது நல்ல படைப்பைக் கூட நல்லது என்று சொல்ல அவர்களால் முடியவில்லையே ஏன்? நிலை இப்படியிருக்க நாம் முன்னேறி விட்டோம் என்று நம்மால் எப்படி பெருமைப் பட முடியும்?

தங்களுக்குள்ள ஒருபக்கச்சார்பற்ற மதிப்பீடு நம் எல்லோருக்கும் வரவேண்டும் அதன் பிறகு நாம் முன்னேறி விட்டோம் என்று எல்லோருமே மார்பு தட்டித் துள்ளலாம் அல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வத்திக்கான் வானொலி (தமிழ்ப்பணி)

வத்திக்கான், திருத்தந்தையின் ஆளுகைக்குட்பட்ட நகரம் என்பதை அனைவரும் அறிவார்கள். இது ஒரு நகராயினும் ஒரு தனி நாட்டுக்குரிய அந்தஸ்தைக் கொண்டுள்ளது. கத்தோலிக்க மதபீடத்தின் தலைவராக உள்ள திருத்தந்தையே வத்திக்கானின் தலைவராகவும் உள்ளார்.

உலக நாடுகளுக்காக வத்திக்கானிலிருந்து பல மொழிகளில் ஒலிபரப்புகள் நடைபெறுகின்றன. தமிழ் மொழியிலும் ஒலிபரப்பு நடைபெறுகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

ஞாயிற்றுக்கிழமையில் - ஞாயிறு சிந்தனை.

திங்கட்கிழமையில் - திருத்தந்தையின் மூவேளை ஜெப உரை, கதையும் கருத்தும், அஞ்சல் பெட்டி.

வியாழக்கிழமையில் - திருத்தந்தையின் பொதுப்பேட்டி பேராலய அறிமுகங்கள் என்று பல்வேறுபட்ட அம்சங்கள் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

திங்கள் தவிர்ந்த ஏனையநாட்களில் தினமும் 4 நிமிடங்கள் செய்திகள் ஒலிபரப்பாகின்றன.

வத்திக்கான் தமிழ் ஒலிபரப்பை தினமும் காலை 7.00 மணிக்கு சிற்றலை, 25, 31, 41, மீட்டர் அலைவரிசைகளிலும், மாலை 8 - 10 மணிக்கு 16, 19, 25 மீட்டர் அலைவரிசைகளிலும் நேயர்கள் கேட்கலாம்.

நம்மவரான தமிழ்தூது தனிநாயகம் அடிகள் வத்திக்கானில் கல்வி பயின்ற காலத்தில் வத்திக்கான் வானொலியில் தமிழ்ப்பிரிவில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது தமிழ்ப்பிரிவின் பொறுப்பாளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த இயேசு சபைக் குரு ஒருவர் பணியாற்றுகிறார்.

தொடர்பு கொள்ள விரும்பும் நேயர்கள்
வத்திக்கான் வானொலி
லொயோலா கொலிஜ்
அ. பெ. எண் 716
சென்னை 600 034 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

## மீட்பின் காவியம்

### புதிய இசை நாடாத் தொகுதி

திருச்சி கலைக்காவிரி வழங்கிய கவிஞர் கண்ணதாசனின் இயேசு காவியத்திலிருந்து ஒரு பகுதியை அதாவது இயேசுவின் ஜெத்சதமனித் தோட்ட வாழ்விலிருந்து உயிர்ப்புவரை உள்ள பகுதிகளை இசைப்பாடல்களாக 'மீட்பின் காவியம்' என்ற பெயரில் கலைக்காவிரி வெளியிட்டுள்ளது. 60 நிமிடம் ஓடக்கூடிய மூன்று நாடாக்கள் கொண்ட தொகுதியாக இது அமைந்துள்ளது.

கவியரசரின் இனிய, எளிய கவிதைகளுக்கு பிரபல தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் மெல்லிசைமன்னர் M. S. விஸ்வநாதன் இசையமைத்துள்ளார். பிரபல பின்னணிப் பாடகர்கள், S. P. பாலசுப்பிரமணியம் T. M. சௌந்தரராஜன், P. சுசீலா, வாணி ஜெயராம், ராஜ்குமார் பாரதி ஆகியோர் பாடியுள்ளனர்.

மூன்று பாகங்களும் அடங்கிய தொகுதியின் விலை ரூபா 160/-
ஒரு பாகம் மட்டும் (ஒரு நாடா) 55/-
தபாற் செலவு தனி.
தொடர்பு: இயக்குனர்
சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் 44, மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "நம்மைச் சுற்றி நடக்கும் அவலங்களை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது"

2ம் அருள் சின்னப்பர்

—சிந்தனைக் கட்டுரை—



### iii அரசியல் நிலை

நம் நாட்டின் அரசியல் நிலையே இன்றைய பல பிரச்சனைகளுக்கும் மூலகாரணமாக உள்ளது. சுதந்திரமடைந்த நாள் முதல் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் சிறுபான்மை இனத்தின் உரிமைகளை - நலன்களை படிப்படியாகப் பறித்து வந்தமை, உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க முயலாமை, சொந்த நாட்டுப்பிரச்சனையை நீதியாக, சமாதானமாகத் தீர்க்க முயலாது அந்நிய நாட்டு தலையீடுகளுக்கு வழிசமைத்தமை பிரச்சனைகளின் முக்கிய காரணங்களாகின்றன.

அவசரகால சட்டத்தின் துணை கொண்டு இரண்டு வருடத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டோர் பலபேர்; கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டோர் அநேகம், சட்டத்தின் உரிய நடவடிக்கையின்றி மரணமடைந்தோர் அதிகம், அரசின் கைவசத்தில் இருக்கும்போதே காணமல் போனோர் பலர். இத்துடன் கத்தோலிக்க குருக்களான அருட்திரு பஸ்ரியன், அருட்திரு மைக்கேல் றொட்ரிகோ போன்றவரின் மரணங்கள் நியாயமான கேள்விகளை எழுப்புகின்றன. நேர்மையான பதிலை அரசிடம் இருந்து எதிர் பார்க்கின்றன.

இறைவன் எசெக்கியேலிடம் காலமும் நேரமும் வந்துவிட்டது. என் வார்த்தையை அறிவிக்க வேண்டும். நியாயமான கேள்விகளைக் கேட்டு பதில் பெறக் கூடிய செயற் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று பணித்தார். இன்று யார் அவருடைய வார்த்தையை எடுத்துக்கூறக் கடமையும் பணிப்பும் பெற்றுள்ளார்கள்? ஒவ்வொரு கிறிஸ்தவனும் எசெக்கியேலாக இறைவனால் அழைக்கப்பட்டுள்ளான்.

1988 பங்குனி தெழ் தொண்டனில் தெயத்திலிருந்து ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். "இந்த நாடு இன்று பிரசவ வேதனையுற்று தவிக்கின்றது. ஒரு ஜீவ மரணப் போராட்டமே நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புள்ள மனித உயிர்கள் வகை தொகை இன்றி அழிந்து கொண்டிருக்கின்றன. அமைதியை காண, நீதி நிலைக்கநாம் இன்னும் எத்தனை உயிர்களைத் துறக்க வேண்டும். இரண்டு அன்னையர் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு இறந்து கொண்டிருக்கின்றார்கள்"

இதில் ஒரு அன்னை கிறிஸ்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விதத்தில் அந்த அன்னை புதிய எசெக்கியேலாக உருவெடுத்து இருப்பது வரவேற்கத்தக்கது. கிறிஸ்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களும், குருக்களும், ஆயரும் அவர்களுடன் இணைந்து ஆயுதங்களையும், அழிவுகளையும், உயிர் இழப்புகளையும் விடுத்து பேச்சு வார்த்தைமூலம் நாட்டின் பிரச்சனைகளை தீர்த்து வையுங்கள் என்று கோரிக்கைவிடின், இணைந்து உண்ணாவிரதம் இருப்பின் எவ்வளவு நல்லது. இத்துடன் எமது சிங்கள சகோதரரும் கிறிஸ்துவில் வேற்றுமை இல்லை. யாவரும் சகோதரர். எனவே ஒருவரை ஒருவர் மதிக்கவும் ஏற்றுக் கொள்ளவும் வழி செய் என்று கோரிக்கைவிடின் நாட்டில் மாற்றம் ஏற்படாதா...?

இயேசு தன்னுடைய பணியை ஆரம்பிக்கும் போது இறைவாக்கினர் இசையாவை மேற்கோள் காட்டுகின்றார்.

"ஆண்டவரின் ஆவி என் மேலே. ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார்.

எளியோருக்கு நற்செய்தி சொல்லவும்: சிறைப்பட்டோர் விடுதலையடைவர்: குருடர் பார்வை பெறுவர்என அறிவிக்கவும்:

ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்:

ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும்.

அவர் என்னை அனுப்பினார்."

லூக்கா 4 : 18 - 19)

புதிய சமூகம், புதிய அரசியல் அமைப்பு புதிய பொருளியல் நோக்கு என உழைத்தவர் இயேசு. எனவேதான் அவருக்குச் சிலுவை மரணம் கிடைத்தது. எனினும் மடிந்த அந்தக் கோதுமை மணி அழிந்து விடவில்லை. வாழ்வு கொடுக்கும் பயிராக மாறியது.

கிறிஸ்துவின் வழியில் புதிய சமூகம் கட்டியெழுப்பக் கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றோம். நாம் இணைந்து செயற்படா விட்டால், தியாகங்கள் செய்யாவிட்டால் மத்தேயு 25 அதிகாரத்தினுல் இயேசு கூறுவது சற்று வேறுவிதமாக ஒலிப்பதைக் கேட்க வேண்டியிருக்கும். எவ்வாறெனில்,

## யோகி

'நான் வாழ்க்கைச் செலவின் உயர்ச்சியினுல் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடினேன். நீ அதைக் குறைக்க என்ன செயற்திட்டங்கள் தீட்டினுய்?

நான் அகதியாய்த் தெருவில் நின்றேன். என்னை இந்த நிலைக்கு தள்ளிய சூழலை மாற்ற நீ என்ன செய்தாய்?

நான் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, சித்திரைவதை செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டேன். என் விடுதலைக்கு நீ என்ன செய்தாய்?

நான் கைது செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு, மறைக்கப்பட்டு உலகிற்கு நான் காணுமல் போய் விட்டேன் என்று அறிவிக்கப்பட்ட போது என்னுடைய அவல மரணத்தை வெளிக்கொணர நீ என்ன செய்தாய்?

நான் உரிமைகள் பறிக்கப்பட்டு இரண்டாந்தரப்பிரஜையாகக்கணிக்கப்பட்டேன். என் நிலையை உயர்த்திச் சுதந்திரத்தை மீட்க நீ என்ன செய்தாய்?

### நிறைவு

'ஆண்டவர் எசேக்கியேலிடம்' மனுமகனே நீ என் சமூகத்தின் சாமகாவல்காரனுக நியமிக்கப்பட்டுள்ளாய்' என்கிறுர்.


செயல்பட வேண்டியது கிறிஸ்தவர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

### மனமே... மனமே...

**எங்கே எதைத் தேடிப் புறப்பட்டாலும் உறுதியான மனதுடன் செல்லுங்கள். உறுதியான மனத்திற்கு தேவையானதைக் கண்டிப்பாகப் பெற்றுத் தரும் ஆற்றல் உண்டு. இதை மறந்து விடாதீர்கள். உறுதியான மனமே உன்னதமான வாழ்வை ஏற்படுத்தும். நோர்மன் வின்சன்ட் பீல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அப்போஸ்தலர் பணி XII

க. பொ. த. உயர்தரம்

## தெசலோனிக்காவில் சின்னப்பர்

நற் செய்தியின் விதைகளை செல்வந்தர் மத்தியிலும், ஏழைகள் மத்தியிலும் தூவி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் சின்னப்பர் பிலிப்பி நகரிலிருந்து புறப்பட்டார். அம்பிபொலிஸ், அப்பொலோனியா ஊர்களைக் கடந்து தெசலோனிக்கே நகரை அடைந்தார்.

தெசலோனிக்கே மகதோனியாவில் ஒரு மாவட்டத்தின் தலை நகரமாகும். இது உரோமை மாவட்ட ஆட்சியாளரின் இருப்பிடமாகவும் விளங்கியது. தெசலோனிக்கே பிலிப்பியைப் போன்று சுதந்திரமான நகரமாக இருந்தது. தற்போது தெசலோனிக்கே 'சோலன்கி' என்று அழைக்கப்படுகிறது.

இங்கேயும் முதலில் யூதர்களுக்கே அவர்களின் செபக் கூடங்களில் நற்செய்தி போதிக்கின்றார். சின்னப்பர் அங்கு சென்று மூன்று ஓய்வு நாட்களில் பேசியதாகக் குறிப்பிடப் படுகிறது. ஒருவேளை அவர் அதற்கு மேலும் அங்கு தங்கியிருக்கலாம். தெசலோனிக்கேயருக்கு எழுதிய மடலில் அவர் கூடாரம் செய்வதில் தனது சம்பாதியத்தைத் தேடிக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவே யூதர்கள் எதிர்பார்த்த மெசியா என்று நிரூபிக்க முயல்கின்றார். ஆனால் அதுவே ஒரு வகையில். அவர்களின் மனமாற்றத்திற்குத் தடையாக அமைந்தது. ஆயின் அவரது போதனை அங்கு வெற்றியும் அடைந்தது. பல கடவுள் பயமுள்ள புறவினத்தாரும், பெருங்குடி மகளிரும் கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டு திருச்சபையில் சேர்ந்தனர்.

இவ்விதமாக ஒரு சிலர் ஏற்றுக்கொள்வதும், பலர் மறுப்பதும் சின்னப்பருக்குப் புது அனுபவமல்ல. இங்கு யூதர்கள் பொறாமையினால் கோபம் கொண்டு அவர் போதிப்பதைத் தடை செய்ய முயற்சி செய்தனர். பணம் கொடுத்து குழப்பம் விளைவிப்பவர்களை வாங்கி அமளி உண்டாக்கினர். அவர்களது திட்டம் பிழைத்து விட்டது. சின்னப்பர் யசோனின் வீட்டில் தங்கியிருப்பார் என நினைத்து அதனைத் தாக்க வந்தனர். சின்னப்பரை அங்கு காணாததால் யசோனையும் மற்றும் சிலரையும் நடுவர் முன் இழுத்துச் சென்று செசாருக்கு எதிரான புதியதொரு அரசனை உருவாக்குவதாகப் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு தண்டனையுடன் எச்சரிப்பும் விடுக்கப்பட்டது. சின்னப்பரும் சீலாவும் பெரேயாவுக்குச் செல்வது நல்லதெனச் சொல்லிப் புறப்பட்டனர்.

## பெரேயாவில் சின்னப்பர்

பெரேயாவிலும் ஒரு செபக்கூடம் இருந்தது. பெரேயாவில் இருந்த மக்கள் நற்செய்தியைக் கேட்பதில் ஆர்வம் காட்டினர். அந்நகர மக்கள் தெசலோனிக்கே நகர் மக்களை விட பெருந்தன்மையுள்ளவர்கள் என லூக்கா கூறுகின்றார். அவர்கள் ஆர்வமுடன் கேட்டாலும் அவர் சொல்வது சரியா என மறைநூலை ஆராய்ந்து பார்த்தனர். ஆரம்பத்தில் வரவேற்பு இருந்தாலும், தெசலோனிக்கேயில் இருந்து வந்த யூதர் இங்கும் மக்களைத் தூண்டி விட்டு நற்செய்தி அறிவிப்பாளர்களுக்கெதிராகப் புரட்சி செய்ததால் சின்னப்பர் அங்கிருந்து புறப்பட வேண்டியிருந்தது. ஆயினும் சீலாவும், தீமோத்தேயும் அங்கு சில நாட்கள் தங்கியிருந்து திருச்சபை வளர உழைத்தனர். சின்னப்பர் அங்கிருந்து புறப்பட்டு ஏத்தென்ஸ் வரை வழி நடத்தப்பட்டார். சீலாவையும் தீமோத்தேயுவையும் வெகு விரைவில் தன்னோடு வந்து சேரும்படி கூறி விட்டுச் சென்றார்.

## ஏத்தென்சில் சின்னப்பர்

ஏத்தென்ஸ் நகரம் அக்காலத்தில் நாகரீகத்திலும், அறிவிலும், கலையிலும் சிறந்து விளங்

கியது. லூக்கா அக்காலத்தில் தழைத்தோங்கி விளங்கிய இரு பெரும் தத்துவ இயல்களைப் பற்றிக் கூறுகிறார். அதாவது எப்பிக்கூறியனிசம் (EPICURIANISM)ஸ்தொயிசிசம் (STOICISM) என்பவையாகும். எப்பிக் கூரஸ் என்பவரினால் பரப்பப்பட்டது எப்பிக்கூரியனிசமாகும். அதன் படி உலகத்தில் இன்பத்தையே சுவைக்க வேண்டும். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஒரேயொரு வழி, போகங்களில் மிதப்பதேயாகும். இன்று உண்டு, குடித்து மகிழ்ச்சியாக இருப்பதே சிறந்தது. ஏனெனில் நாளை மடிந்து விடுவோம் போன்ற தத்துவங்களைக் கொண்டிருந்தது. 'செனோ' (ZENO) என்பவரினால் ஸ்தொயிசிசம் பரப்பப்பட்டது. இதன்படி இயற்கையின் நியதிப்படி நடப்பதே மகிழ்ச்சி தரும் வழி என்ற போதனை முக்கியமானதாகும். அதாவது ஒருவன் தன் வாழ்வில் வரும் துன்பங்களையும், தோல்விகளையும் பரந்த மனப்பான்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## யாருமறியாத தெய்வம்

ஏத்தென்சில் இந்த இருவித கொள்கைகளைப் பின்பற்றுகின்றவர்களுடைய கல்விச் சாலைகளோடு பல இன மக்களுக்குமுரிய வானளாவிய ஆலயங்களும் பல தேவதைகளுக்குச் சிலைகளும் பலி பீடங்களும் நிறைந்திருந்திருந்தன. ஏத்தென்ஸ் நகர வீதிகளில் நடந்து செல்வது சின்னப்பருக்குப் பெருமையாக இருந்தது. இத்தகைய காட்சிகளை ரசித்து வந்த சின்னப்பர் சிலையற்ற ஒரு பீடத்தையும் அவதானித்தார். அதில் 'யாருமறியாத கடவுளுக்கு' என எழுதியிருந்தது. அதனைப் பற்றிய ஒரு பழங்கதையும் உண்டு. ஒரு தடவை ஏத்தென்ஸ் நகரம் புதுவிதமான நோயொன்றினால் பீடிக்கப்பட்ட போது, அதிலிருந்து விடுபட, மக்கள் தங்களுக்குத் தெரிந்த தெய்வங்களுக்கெல்லாம் பலி செலுத்தினார்களாம். ஆனால் நோய் மறையவில்லை, எனவே ஏமாற்றத்தினால் 'யாருமறியாத தெய்வத்திற்கு' என ஒரு பீடம் அமைத்து பலி செலுத்திய பொழுது, நோய் மறைந்து விட்டதாம்.

சின்னப்பர் காட்சிகளை ரசித்ததோடு மட்டும் நிற்கவில்லை பல அறிஞர்களோடும் உரையாடினார். சிலருடன் வாதாடினார். சின்னப்பரின் அறிவாற்றலைக் கண்டவர்கள் 'அரையொபாகு மன்றத்தில்' வந்து உரை ஆற்றும்படி அவருக்கு அழைப்பு விடுத்தனர். ஏத்தென்ஸ் நகரிலுள்ள அறிவாளிகள் ஒன்று கூடும் இடமாக அரையொபாகு மன்றம் விளங்கியது. சின்னப்பரின் அறிவுக்கு மதிப்பு அளிக்கும் அடையாளமாக அந்த அழைப்பு அமைந்தது. சின்னப்பரின் உரையை அனை வரும் அமைதியாகக் கேட்கத் தொடங்கினர் சின்னப்பரில் ஒரு கல்விமானை, அறிஞனை' அவர்கள் கண்டார்கள்.

## சின்னப்பரின் பேருரை

இந்தப் பேருரை லூக்காவின் எழுந்து வன்மைக்கும், நடைக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அறிவிலும் கலையிலும் சிறந்து விளங்கிய அறிஞர்கள் மத்தியிலே எப்படி ஒரு கிறிஸ்துவர் தனது விசுவாசத்தை எடுத்துரைக்கிறார் என்று ஒரு மாதிரிகை காட்டுகிறார் லூக்கா - இப்போதனைப் பகுதியை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| முன்னுரை | - | 17;22 - 23 |
| முதல் பகுதி | - | 17;24 - 25 |
| இரண்டாம் பகுதி | - | 17;26 - 27 |
| மூன்றாம் பகுதி | - | 17;28 - 29 |
| முடிவுரை | - | 17:30 - 31 |

சின்னப்பர் சூழ்நிலைக்கும், தருணத்துக்கும் ஏற்றவாறு உரையாற்றுகின்றார் இது ஒரு செபக் கூடம் இல்லையாதலால், தனது உரையை தத்துவ ரீதியில் தொடங்குகின்றார். சின்னப்பரின் முன்னுரையிலே ஒரு விளிப்பு இருக்கின்றது. அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி 'தெய்வ பயம்' உள்ளவர்களே எனக் கூறி அழைக்கின்றார். இவ்விதமாக அவர்களது மதப்பற்றைப் பாராட்டியதோடு, அறியாத தெய்வத்திற்கென அமைக்கப்பட்டிருந்த பீடத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, தான் அந்த அறியாத தெய்வத்தைப் பற்றித்தான் அவர்களுக்கு எடுத்துக்கூற வந்திருப்பதாகக் கூறித் தனது போதனையை அறிமுகம் செய்கிறார்.

சின்னப்பரின் போதனை ஒரே கடவுளின் மீது தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுதல் போன்று அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

17:24-25 வசனங்களில் இறைவனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவைப் பற்றியும்.

17:26-27 வசனங்களில் இறைவனுக்கும் மனிதனுக்கும் இருந்த இடைவெளி பற்றியும்.

17:28-29 வசனங்களில் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே உள்ள நெருங்கிய உறவைப் பற்றியும் பேசுகிறார்.

இறைவன் எப்படி மனிதர்களைத் தேடி வருகிறார், தன்னிடம் அழைக்கிறார் என்ற கருத்தைக் கூறி மனம் திரும்ப வேண்டும். கடைசிக் காலம் வந்து விட்டது என்பதையும் மிகவும் சாதுரியமாகக் கூறுகிறார். சுருங்கக் கூறின், அவரது உரை இவ்வாறு அமைந்தது. கடவுள் என்பவர் கல்லில் அல்லது பொன்னில் செதுக்கப்படக் கூடிய ஒருவர் அல்ல. அவர் தான் அனைத்தையும் படைத்தவர். அவர் தன்னை நசரேத்தூர் இயேசுவில் வெளிப்படுத்தினார். அவரது சொந்த இனமாகிய யூதர்களே அவரை எதிர்த்தனர். அவரைச் சிலுவையில் அறைந்தனர். ஆனால் கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்தார்.

## உரையின் விளைவு

தலைக்கனம் பிடித்த தத்துவ ஞானிகளுக்கு சின்னப்பரின் உரை அதிக கடினமாக இருந்தது. 'உயிர்ப்பு' என்ற வார்த்தையைக் கேட்டதும் ஏளனச் சிரிப்புடன் கேலி பண்ணத் தொடங்கினர். ஏனென்றால் கிரேக்க தத்துவங்களின்படி உயிர்ப்பு என்பதே கிடையாது. உயிர்ப்பு என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

ஏத்தென்ஸ் நகரம் சின்னப்பரின் செய்திக்கு செவிசாய்க்க மறுத்தது. ஒரு சிலர் ஏளனம் செய்தனர். இன்னும் பலர் மீண்டும் கேட்போம் என்று கூறி வெளி நடப்புச் செய்தனர். ஆயினும் ஒரு சிலர் அவரைப் பின்பற்றியதாக அறிகிறோம். (தாமரி, தியோனிசியூஸ் என்பவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்)

சின்னப்பர் ஏத்தென்ஸ் நகர மக்களுக்கு எவ்வித மடலும் வரைந்ததாகக் கூறப்படவில்லை. ஏத்தென்ஸ் நகரை விட்டுப் புறப்படும் போது ஏமாற்றமடைந்தவராகவே சின்னப்பர் சென்றிருப்பார். கிரேக்க கலாச்சாரத்தின் கேந்திர ஸ்தானத்தில் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது. ஆயினும் சின்னப்பர் மனந் தளரவில்லை.

## வினாக்கள்

1. தெசலோனிக்கேயில் நற்செய்தி அறிவிப்பாளர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றம் என்ன?
2. பெரேயா நகர மக்கள் பெருந்தன்மை உள்ளவர்கள் என லூக்கா கூறுவதேன்?
3. ஏத்தென்ஸ் நகரில் சின்னப்பரைக் கவர்ந்தவை எவை?
4. அரையொபாகு மன்றத்தில் உரையாற்றச் சின்னப்பருக்கு உதவியது எது?
5. அரையொபாகு மன்றத்தில் சின்னப்பர் தன் போதனையில் கையாண்ட புதுமுறை என்ன? ஏன் அவ்வாறு செய்தார்?
6. ஏத்தென்ஸ் நகர மக்களுக்கு சின்னப்பர் ஆற்றிய உரையின் சுருக்கம் என்ன?
7. புனித சின்னப்பர் இயேசுவையும் உத்தானத்தையும் பற்றி ஏத்தென்ஸ் நகர மக்களுக்குப் போதித்ததின் விளைவு என்ன?
8. ஏத்தென்ஸ் நகர மக்கள் மனந்திரும்ப மறுத்ததன் காரணம் என்ன?

**இன்பம் எங்கே . . .**

இன்பத்தைத் தேடி அலைய வேண்டாம். உறுதியான, விசுவாசமான உள்ளத்தை நீங்கள் காத்து வந்தால் - எல்லா இடங்களிலும் செல்லும் இடங்களிலெல்லாம் அதைக் காணலாம் — வைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தஞ்சைக் கவியரசர்

# வேதநாயக சாஸ்திரியார்

டாக்டர் கிறேஸ் தேவராஜ்

இறைமையில் புதுமையும், புரட்சியும் கலந்து தமிழிசையால் இறைவனைப் பாடி மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்த பாவலருள் தஞ்சைக் கவியரசர் வேதநாயக சாஸ்திரியாரும் ஒருவராவார். 1774ம் ஆண்டு திருநெல்வேலியில் பிறந்து அருள்மிகு சுவார்ட்ஸ் பேரறிஞரால் தஞ்சைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

தம் ஞானகுருவான சுவார்ட்ஸ் அறிஞரிடம் பயின்றபோதே நல்லியல்புகள் அனைத்தையும் தம் அகத்தில் பெற்ற வேதநாயகர், சுவார்ட்ஸ் பாதிரியாரின் அன்பளிப்பான விவிலியத்தின் ஒரு பகுதியாகிய 'சங்கீதம் என்னும் கவிதைத் தொகுப்பு வேதநாயகரின் உள்ளத்தை ஈர்த்ததுடன், கவிதை மழை பொழிவதற்கும் தூண்டுகோலாய் அமைந்து விட்டது.

கவிதை என்ற ஆழ்கடலில் மூழ்கிச் சிந்தனையை அடக்கி, உலகியல் இடர்களை மறந்து தம்மை மறந்து, சூழ்நிலையை மறந்து கருத்துக் கவிதைகளை வெளிக்கொணர்ந்து உலகுக்களித்தார். இறைவனைப் பாடுவதே தன்குறிக்கோள் என்பதனை உறுதியுடன் நிலைநாட்டினார்.

தீயவரின் சூழ்ச்சியால் சரபோசி மன்னன் பிறதெய்வத்தின் மேல் பாடும்படி கட்டளையிட்டபோது 'இயேசுவைப் பாடிய வாயால் பிறதெய்வங்களைப் பாடமாட்டேன் என மறுத்து விட்டார் சாஸ்திரியார்.

பராபரன் அல்லாத பாட்டறியான் - எம்
பராபரனை அன்றி பாட்டுரையான்.
பாடும் வரத்தைக் கொடுத்தவனைவிட்டுப்
பாடுவாயோடி ஞானப்பெண்ணே.

என்றெல்லாம் இறையுணர்வு பொங்கி வழியப் பாடி நிறைவு கண்டார்.

மறுமலர்ச்சிக் கவிஞர் என்ற பெயருக்கேற்ப, திருமறைச் செய்திகளையும், வழிபாட்டு மரபுகளையும் இயன்றவரை தமிழ் நாட்டு மரபாக மாற்ற முனைந்தார். 120 க்கு மேற்பட்ட நூல்களைப் பாமரரும் விரும்பிப்பாடும் இனிய எளிய முறையில் இயற்றினார்.

பஜனைகளும்,இசை கலந்த சொற்பொழிவுகளும், தெருப்பாடல்களுமாக, சாஸ்திரியாரும் அவரது குடும்பத்தினரும் நாள் முழுவதையும் இசைமயமாக்கி, இயேசு பெருமானை உள்ள முருகப் பாடி மகிழ்ந்தனர்.

இலக்கியச் சுவை ததும்பத் தமிழ் நாட்டு நாட்டுப்புற இசைவடிவங்களில் திருமறைச் செய்திகளை இனிமையாகப் பாடியுள்ளார், சான்றாக சாஸ்திரக்கும்மி, சித்திரத் ஞானக் கும்மி, ஞானத் தாலாட்டு திருச்சபை ஊஞ்சல், பிரலாப ஒப்பாரி, பெத்லேகம் குறவஞ்சி ஆகியவை நாட்டுப்புற இலக்கிய வடிவம் கொண்டவையாகும். கப்பற்றமிழ், வெண்கலச் சர்ப்பம், ஒரே சாதி போன்ற கவிதைகளும் நாட்டுப்புறப் பாடல் மெட்டில் பாடி மகிழக் கூடியவையேயாகும்.


அக்கால வாழ்க்கைகளை ஒட்டித்தம்கவிதைகளை அமைத்த போதும் தமக்கென ஒரு தனிப் பாணியை வகுத்துக் கொண்டவர் வேதநாயக சாஸ்திரியார். இந்தச் சிறப்பால் இவரது பாடல்கள் உயர்ந்து நிற்கின்றன.

மாலைவிடுத்து நம்மாலை யுதித்தொரு
மாலை யெடுத்ததனன்
மாலை கொடுத்திட ஞானத்திருச்சபை
மாலை வழுத்துவனே.

இது போன்ற பாடல்கள் அருணகிரிநாதரின் திருப்புகழ் சந்தங்களை ஒட்டி அமைந்தவை போல் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பண்டு பறித்துத்தின்ற கனிக்குப்
பாடாயீடாயோர்
பங்கமரத்திற் ருெங்கிமரித்து

என்ற பாடல்களும் இதுபோன்ற சந்தச் சிறப்பு உடையன.

இசையரசரான தியாகையரின் காலத்தில் வாழ்ந்தவர் வேதநாயகர். ஆகவே தியாகையர், முத்துத்தாண்டவர் அருணசலக்கவிராயர் ஆகியோரின் கீர்த்தனைகளைக் கற்றுத் தேர்ந்து ஞானபதக் கீர்த்தனைகளை இயற்றினார்.

இது மட்டுமல்ல, இறையுணர்வை எழுப்பவல்ல எண்ணற்ற பல இராகவகைகளை கல்யாணி, தோடி, காம்போதி, அடாஞ, நவரோஜ், ஆனந்தபைரவி, செஞ்சுருட்டி, கேதாரகௌளம், சுத்தபங்களா, சகாஞ, பைரவி, சங்கராபரணம், ஹிந்துஸ்தான் காபுபோன்ற வற்றை இவரது கீர்த்தனைகளில் காணலாம்.

பாம்பாட்டிச் சித்தரின் பாடல் மரபில் திளைத்து திருமறையில் இடம்பெறும் வெண் கலச் சர்ப்பத்தை

காவாதித் தோட்டத்தில் வந்த பாம்பு
கள்ளப்பாம்பு ஆகாத கொள்ளிப்பாம்பு
ஏவாளை ஏய்த்துக் கெடுத்த பாம்பு
உலகெங்கும் திரியுதென்ருடுபாம்பே.

என்பதில் திருமறைச் சத்தியங்கள் பிணைந்து கிடக்கின்றன அல்லவா? திருமறையிலுள்ள உன்னதப்பாட்டை 'ஞான அந்தாதியாக சுவைமிக்க இலக்கிய வடிவில் தந்துள்ளார்.

உலகம் முழுவதையும் தம் உறவினராக்கிக் கொள்ளும் ஒருமைப் பாட்டுணர்ச்சி ததும்ப வடிக்கப்பட்ட சிற்றிலக்கியமே' ஞான நொண்டி நாடகம்'

சாஸ்திரியாரின் பாடல்களுக்கெல்லாம் மூத்தாய்ப்பு வைத்ததுபோல் இருக்கின்றன, அவர்தம் ஆரணுதிந்தம், பெத்லேம்குறவஞ்சி ஆகிய இரு நூல்களும்.

அகஞ்சார் அருளியல் மரபைத் தழுவி இறைவனைத்தலைவனாகவும், சியோன்குமாரியை திருச்சபையாம் தலைவியாகவும் கொண்டு பேரின்பக் காதலை உருக்கமாகச் சித்தரிக்கிருர்.

கன்னலுறும் மின்னரசே
காவிலுறும் பூங்குயிலே
அன்னநடைப் பெண்மயிலே
அருமைச் சியோனே!

என்பது ஆரணுதிந்தம்.

குறவஞ்சியோ இவை யாவற்றிலும் விஞ்சி நின்று, திருவுலா, தலைவி வருகை, தலைவியின் துயர், குறவஞ்சியின் பொலிவு, குறி சொல்லும் பாங்கு சிங்கனும் சிங்கியும் உரையாடுவது போன்ற பகுதிகளைக் கொண்டு திருமறைக் கருத்துக்கள் பொதிந்த செஞ்சொல் ஓவியமாக ஒளிர்கிறது. பெத்லேங் குறவஞ்சி அருட்சுவையும் பொருட்சுவையும் கொண்டது என்பதற்கு

முற்றும் கறுத்து முழங்கால் தடித்தது
மோசமதென்னடி சிங்கி - நான்
சற்றுவிடாமல் செபித்துக் கிறீஸ்துவை
சாற்றினதாலடா சிங்கா.

என்ற பாடல் ஒரு சான்று.

## நல்ல குறிக்கோள்

நம் வாழ்வின் மிக முக்கியமான குறிக்கோள் இன்பமாய் இருப்பதல்ல. அதை அடைவதற்கு எல்லா வகையிலும் தகுதியுடையவராயிருப்பதே.

ஈஹெச் ஃபிக்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர் பாடியுள்ள சாஸ்திரக் கும்மியில் நகைச்சுவையும், சீர்திருத்தக் கருத்துக்களும் இணைந்து இழையோடுவதுடன் உள்ளத்தைத் தொடும்வகையிலும் எழுதப்பட்டுள்ளன.

பட்சி சாஸ்திரம் பார்ப்பானேன் - நீ
பல்லி சாஸ்திரம் பார்ப்பானேன்.
அச்சமாய் நடுங்கித்திரிய உனக்கு
ஆண்டவனில்லையோ ஞானப்பெண்ணே!
மாட்டைத் தொட்டுத் தலைமுழுகாத நீ
மனுஷனைந் தொட்டுத் தலைமுழுகுவதேன்?
மாட்டைக்காட்டிலும் மனிதன் முக்கி
யமோ
சொல்லுவாயோடி ஞானப்பெண்ணே!

என்பது இனிமை சான்ற நகைச்சுவையுடன் சமுதாய அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றதன்றோ? மேலும் ஆங்காங்கே நிறைந்து கிடக்கின்ற சொல்லழகுகளும், உவமை நயங்களும். உருவக அணிகளும் வேத நாயக சாஸ்திரியாரின் படைப்புக்களை இறவா இலக்கியங்களாக அமைத்து விட்டன.

சிற்றிலக்கிய வடிவங்கள் பலவற்றை இவரது படைப்புக்களில் காணமுடிகிறது. தமக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக் கொண்டு ஆழ்ந்த புலமையுடன், இறைவன் பால் மக்களை ஈர்த்துச் செல்லும் இனிமை சான்ற இசைப் பாக்கள் புனைந்து வாழ்ந்த அருட் கவிஞர் வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியப் படைப்புக்கள் என்றும் போற்றப்படத் தக்கவையாகும்.

**(வளரும் கிறிஸ்தவத்தில் மலரும் தமிழ் நூலிலிருந்து)**

**எவன் தன்னைப் பற்றியும் தன் காலத்தைப் பற்றியும் எழுதுகின்றானோ அவனே எல்லா மக்களைப் பற்றியும் எல்லாக் காலத்தைப் பற்றியும் எழுதும் எழுத்தாளன். — பெர்னாட்ஷா**

'காட்ஃபாதர்' என்ற நாவலை எழுதிய உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் மரியோ புலோ 1968 ம் ஆண்டு தொடக்கம் 1978 ம் ஆண்டு வரையுள்ள பத்து வருடங்களில் தனது எழுத்தாற்றல் வாயிலாக 4,80,00,000 ரூபாய் சம்பாதித்திருக்கிறார். அமெரிக்காவில் சில இடங்களில் இவர் வெளியே போனால் சினிமா ஸ்டார்களைச் சூழ்ந்து கொள்வது போல் மக்கள் இவரை சூழ்ந்து கொள்கிறார்கள்.

இந்த எழுத்தாளரின் சில ஆலோசனைகள்

1. எப்போதும் நான் என்ற வார்த்தையை உபயோகித்து எழுதாதே
2. நீ எழுத விரும்புவதை யாருக்கும் காட்டாதே.
3. நீ எழுதி முடிப்பதற்கு முன்பு அதைப்பற்றி யாரிடமும் பேசாதே.
4. முதலில் எழுதியதை மறுமுறை திருத்தி எழுதுவதில் தான் எழுத்தாளனின் ரகசியமே இருக்கிறது.
5. உன் எழுத்துக்கள் பிரசுரமாவதற்கு முன்னால் சினிமாவுக்கு விற்று விடாதே.
6. குடும்பச் சண்டைகள் உன் எழுத்தைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்.
7. நிறையப்படி. நிறைய சினிமாவுக்குப் போ
8. உன்னைத் தவிர வேறு யாரையும் நம்பாதே.

(விகடன் இதழில் இருந்து)

**தொகுப்பு;- எஸ். ஜீவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# துணுக்குகள் புண்படுத்தின!

**கடந்த ஜூன் மாதத் தொண்டனில் 'நாலாயிரச் சிரிப்புகள்' என்னும் தலைப்பில் வெளியான துணுக்குகள் தம்மைப் புண்படுத்துவதாக உள்ளன என்று கிழக்கிலங்கை, கிராமசேவை அலுவலர் சங்கம், மட்டக் களப்பு, கண்டனம் தெரிவித்துள்ளது. இதையிட்டு அதன் செயலாளர் திரு. ஏ. ஜே. மங்களராஜ் அவர்கள் எமக்கு அனுப்பி வைத்த கடிதத்தை அப்படியே இங்கு தருகிறோம்.**

ஆசிரியர்,
தொண்டன்,
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு.

3 - 6 - 1989

ஐயா,

தங்களின் தொண்டன் பத்திரிகை ஜூன் 1989 இதழில் 'நாலாயிரச் சிரிப்புகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட சில துணுக்குகள் 'விதானைமார்' என்று குறிப்பிடப்படும் கிராம சேவை அலுவலர்களது மனங்களைப் புண்படுத்துபனவாக அமைந்துள்ளன.

சிரிப்புத் துணுக்குகள் மற்றையோரது மனதைப் புண்படுத்தாமல் அமையவேண்டும். இதுதான் பத்திரிகாதர்மம்.

அத்தனைபேரும் உத்தமர்களுமல்ல. அத்தனைபேரும் மோசடிக்காரர்களுமல்ல. கலை மணியிடம் மாத்திரமல்ல உங்கள் வட்டாரத்தில்கூட ஊறல்கள் இருக்கலாம்,

சாந்தி, சமாதானம், சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மனப்பான்மை இவைகளைப் போதிக் கும் கத்தோலிக்க மதத்தின் குரலாக ஒலிக்க வேண்டிய தொண்டன் இப்படியான குப்பை களைத் தோண்டுபவனாக மாறுவது வருந்தத் தக்கது. மக்கள் உள்ளங்களைப் புண்படுத்துவதை விட மனங்களைப் பண்படுத்துவது மேலானது. எதிர்காலங்களில் வெளியிடும் விஷயங்களை அளந்து பார்த்து, தகுதி கண்டு பிரசுரிப்பீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இவ்வண்ணம்,
தங்கள் உண்மையுள்ள
**ஏ. ஜே. மங்களராஜ்**
செயலாளர்

**பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பது திருச்சபையின் பணி. தனிப்பட்ட எவரையும் மனம்நோகச் செய்வது எமது நோக்கமல்ல. எமது எழுத்துகள் தனிப்பட்ட விதத்தில் எவரையும் மனம்நோகச் செய்திருந்தால் அதற்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.**

ஆ. ர்.

சீழ் பிடித்த சிரங்கைக் கட்டுப் போட்டு மறைக்காதீர்கள். அது ஒரு வேளை காலுக்கே ஆபத்தாகலாம். அதைக் கழுவி, மருந்து போட்டு காற்றுப்பட வையுங்கள். சிரங்கும் குணமாகும், காலுக்கும் ஆபத்துக் குறையும்.

**சுவாமி இராமகிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண் சிமிட்டிக் கொண்டு ஒரு விமானம் மேலே பறந்து சென்றது. சிலீரென்று பாய்ந்த குளிர் காற்று மேரியின் மேனியைத் தழுவியது.

நாளைக்குக் கட்டாயம் லெக்சர்ஸ்க்குப் போக வேண்டும் என்று நினைத்தாள். கிரிஸ்ரோபருடன் மாலை நேர டிஸ்கஸனுக்கும் போக வேண்டும். விரிவுரை முடிந்ததும் குகநாதனைச் சந்தித்துத்தான் இரண்டு வாரமாய் ரைபோயிட்டுக் காய்ச்சல் வந்து படுத்திருந்தமையால் அவரது விருப்பப்படி 'பேர்த்டே' க்கு வரவில்லை என்று சொல்ல வேண்டும். வேறு அதிகமாய்க் கதையை வளர்த்துக் கொள்ளக்கூடாது. அந்த நேரத்தில் அவர் தனது திருமணம் பற்றிச் சொல்லக் கூடும். சொல்லாமல் விட்டால் அது இன்னும் நல்லது இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து அந்த உறவையும் துண்டித்துக் கொள்ளலாம்.

கிருப்ஸ், குகநாதன் போன்றவர்களுடன் ஒப்பிடுகையில் கிரிஸ்ரோபர் மிக உயர்ந்தவனாக இப்போது மேரியின் சிந்தனையில் தோன்றினான். ''பொண்டிங்'' நடைபெறும் இடங்களில் தான் ஒருபோதும் நிற்பதில்லை என்று ஒரு நாள் சொன்னான்.

தனக்கு ஒருபோதும் 'டிப்ஃபிரஸ்' போன்ற 'கம்பஸ்' 'மூட்ஸ்' வருவதில்லை என்றான் இன்னொரு நாள்.

பஸ்ஸில் ஒரு பெண்ணுக்குப் பக்கத்தில் இருக்க இடம் கிடைத்தாலும் அதில் இன்னொரு பெண் அமர சந்தர்ப்பம் கொடுப்பதை விடுத்துத் தான் ஒரு போதும் அந்த இடத்தில் அமருவதில்லை என்று வேறொரு நாள் சொன்னான்.

தனக்குத் தன்னைத் தவிர வேறு யாரிலும் நம்பிக்கை இல்லை என்றான் மற்றொரு நாள்.

'கரம்' உட்பட எந்த விளையாட்டுக்களும் விளையாடத் தெரியாத புத்தகப் பூச்சி அவன் என்பது உண்மையாயினும் அவன் ஒரு மொடெஸ்ற்' மனிதன் என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தான் 'பாத்றூமுக்குள்' போவதைக்கூடயாரும் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் 'பாத்றூமுக்குள்' நுழைய மாட்டான் என்று ஒரு நாள் ராம் சொன்னதும் இப்போது நினைவு வந்தது. அவ்வளவு 'மொடெஸ்ற்'!

இரண்டாவது முறையும் மேரி 'கரம்' விளையாடுவதில் தோல்வி அடைந்தாள். அத்துடன் 'இனிப்போதும்' என்று நிறுத்திக் கொண்டு போய்ப் படுத்தாள்.

அமைதியே பெரிய சப்தமாயும், செயலின்மையே பெரிய இயக்கமாயும், அந்த இரவு வித்தியாசமாயிருந்தது.

அடுத்த நாள் விரிவுரைக்குச் சென்றாள். ஆனால் குகநாதன் வரவில்லை. தனது திருமண ஏற்பாடுகளைக் கவனிக்க அவர் ஊருக்குச் சென்று விட்டார் என்று சொன்னார்கள். விரிவுரையாளர்கள் எல்லாருக்கும் தனித்தனி அழைப்புக் கொடுத்திருக்கிறார் என்றார்கள். மாணவர்களுக்குப் பொதுவாக ஒரு அழைப்பு நோட்டீஸ் போட்' டில் இருக்கிறது என்றார்கள். அவளுக்குப் பெரிய ஏமாற்றமாய் இருந்தது.

சொந்தச் சகோதரியை விட உம்மிடம் அதிக அன்பு வைத்திருக்கிறேன் என்று சொன்னவர்......! அவளிடம் பகிர்ந்து கொள்ளாமல் தனது மனதில் எந்த இரகசியமும் இல்லை என்று சொன்னவர்...

அவளுக்குத் திருமண அழைப்புக் கொடுக்க மறந்து போனது எப்படி? தன் திருமணத்தைப் பற்றி முன்பே அவளிடம் சொல்லக் கூடாது என்று நினைத்தது ஏன்?

மேரி பல்லினால் பென்சிலைக் கடித்துக் கொண்டாள். வியர்வை புள்ளி புள்ளியாய் உடலில் சேர்ந்தது.




14 — 10 —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலகில் எல்லாமே வெறும் நடிப்பு என்று தோன்றிற்று. யாரிடத்திலும் உண்மை அன்பும் இல்லை உண்மையான அறநெறி ஒழுக்கமும் இல்லை என்று தோன்றிற்று. டால்ஸ்ரோயின் 'வட் மென் வில் பை' என்ற கதையில் ''மனிதன் அன்பினால் வாழுகிறான்'' என்று கூறப்படும் அடிப்படைத் தத்துவம் கூடப் பிழையோ என்று தோன்றியது. நெஞ்சில் ஒரு வலி, புத்தியில் ஒரு வேதனை பொங்கிற்று.

மாலையில் கிரிஸ்ரோபருடன் டிஸ்கஸ்ஸுக்குப் போனாள். ஒரு நாய் இன்னொரு நாயைக் கடிப்பதைப் பார்த்துக் கொண்டு கிரிஸ்ரோபர் அமர்ந்திருந்த போது மேரி போய்ச் சேர்ந்தாள். இவளைக் கண்டவுடன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறியள்?''

''இல்லை அது 'லவ் பைற்' அதுதான் சிரிக்கிறன்...'' என்றான் அந்த நாயைச் சுட்டி.

''எண்டாலும் அந்த நாய் வேதனைப்படுது இல்லையா?''

'' வேதனைப் படத்தான் வேணும். தன்ரை அன்புக்குரியவளை அடிக்காத, அவளுடைய தலை மயிரைப் பிய்த்தெறியாத அவளுடைய உடைகளைக் கிழித்தெறியாத காதலன் அவளை இன்னும் உண்மையாக நேசிக்கத் தொடங்கவில்லை எண்டுதான் நான் சொல்லுவன்... ''

அவன் சொல்வதைக் கேட்க மேரிக்குள்ளே நடுங்கியது. இவன் சாதாரண மனிதன் தானா? அல்லது......?

இதற்கு மேல் அது பற்றிய விவாதத்தில் ஈடுபடாமல் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருவரும் படித்தார்கள்.

மதிய உணவிற்குப் பின்னர் சுடுநீரில் குளிக்கும் ஒருவர் சிலவேளை மரணத்தைச் சந்திக்க வேண்டியிருப்பது ஏன் என்பது பற்றிய கேள்விக்குக் கிறிஸ்ரோபர் விளக்கமான பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் மேரி வானத்தைத் வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்.

''என்ன திடீரெண்டு எங்கையோ யோசிக்கிறியள்'' எல்லாம் அநியாயமாய் இருக்கு. எதிரொலி இல்லாமல் இந்த அநியாயங்களை ஏற்றுக் கொள்ள முடியேல்லை...?''

''எதைச் சொல்கிறீர்? நாட்டைப் பற்றியோ? வீட்டைப்பற்றியோ? ''

'' இரண்டையுந்தான்! ''

குருநாதனைப் பற்றிக் கிறிஸ்ரோபர் கொண்டிருந்த அபிப்பிராயம் முற்றிலும் சரியானதே என்பதை விபரமாகச் சொல்ல நினைத்தாள் மேரி மனதிற்குள்ளே எப்படிச் சொல்வது என்று முடிவு செய்து கொண்டு வாயைத் திறக்கும் நேரம் அந்த மரத்தடிக்குத் திடீரென வந்த ராம்,

'' இதென்ன இரண்டு பேரும் இதிலை இருக்கிறியள்? உங்களுக்கு விஷயம் தெரியாதோ? என்று கேட்டான்.

''ஏன் என்ன'?'

''கம்பஸ் முழுதும் றவுண்டப்புக்கு ஆயத்தம், நீங்கள் கெதியிலை வீட்டுக்குப் போங்கோ. இதிலை இருந்தியள் எண்டால் சந்தேகப்படுவாங்கள்...

சைக்கிளை விரைவாக மிதித்துக் கொண்டு அவர்களைக் கடந்தான் ராம்.

கிரிஸ்ரோபருக்குச் சொல்லவென்று நினைத்த சம்பவங்கள் - புதிய உண்மைகள் - அதுகாறும் துலங்கியிராத வெளிச்சங்கள் எல்லாவற்றையும் மனதில் சுமந்து கொண்டு பதற்றத்துடன் நளினி வீட்டை அடைந்தாள் மேரி.

பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு குறிஞ்சா மரம். 'பரசூற்' போன்ற வடிவத்தில் அமைந்த மயிர் முடிகளைக் கொண்டு அதன் வித்துக்கள் மெதுவாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றாகக் கீழே வரும் போதும் அவற்றைக் குறிவைத்துக் 'கவண்' அடித்துக் கொண்டேயிருந்தான் ஒரு சிறுவன். அந்தச் சிறுவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மேரி.

அணிலுக்கல்லவா கவண் அடிப்பார்கள்? இவன் ஏன் குறிஞ்சா வித்துக்கு அடிக்கிறான்? அவளுக்கு ஒரே குழப்பமாய் இருந்தது.

## தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்தச் சிறுவன் வளாகத்தின் விஞ்ஞானபீடக்கட்டடத்தின் மூன்ருவது மாடியில் ஏறி நிற்கிருன். எப்படி ஏறி இருப்பான்? எல்லாம் அவனுக்குத் தெரிந்த வழிகள் தானே? அவன் அவளுக்குத் தெரிந்த பையன் போலவும் இருந்தான்.

மேரிஎண்ணிக் கொண்டே இருந்தாள். முப்பத் தெட்டு வித்துக்கள் அவன் குறிவைத்த 'கவண்' கல்லுக்குச் சிதறிப் போயின. தப்பி வந்த இரண்டு வித்துக்களையும் மைதானத்தில் நின்று கொண்டிருந்த அவனது நண்பன் பிடித்துக் கொண்டான். யார் இந்த நண்பன்? அவன் முகத்தை உற்று நோக்கிஞள் மேரி. அவனும் அவளுக்குப் பழக்கமானவன் போல் இருந்தான்.

பிறகு இவனும் இறங்கி வந்தான். இருவரும் மைதானத்தில் தாங்கள் பிடித்த குறிஞ்சா வித்துக்களை ஊதி விளையாடினர்.

சுற்றிவர எல்லாத் திசைகளிலும் வெடி ஒலிகள் கேட்டன. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் ஹெலி சுடுகின்ற சத்தம், எங்கோ தொலைவில் விமானம் குண்டு போடும் சத்தம், தெற்கிலே மிகப் பதிவாக மிராஜ் விரைந்து செல்லும் ஒலி. பின்னர் மிக அருகில் 'மெஷின் கண்' சத்தங்கள்!

திடீரென்று கண் விழித்து 'ஓ' வென்று கத்திய போதே கண்டது கனவென்று மனதில் உறைத்தது. மிகுந்த போராட்டத்தின் பிறகே மீண்டும் நித்திரையாகிப் போஞள் மேரி.

தனது உடைகளை யாரோ களைந்து எறிவது போல் மீண்டும் கனவு கண்டு விழித்தாள். விடியற் காலையில் அவளது நெஞ்சுக் குள்ளிருந்து ஒரு குண்டு வெடித்து உடல் முழுதும் சிதறிப் போனது போலிருந்தது. விழித்துப் பார்த்தாள்

இனம் தெரியாதவர்களின் குண்டு பட்டுக் கிருப்ஸ் இறந்து போனதாய் ராம் வந்து சொல்லி விட்டுப் போஞன்.

(தொடரும்)

# நீங்கள் உலகின் ஒளி

இருட்டைக் கண்டால் குழந்தைகளுக்குப் பயம். பெரியவர்களைக் கட்டி அணைத்துக் கொள்வார்கள்.

இருள், அச்சம், அறியாமை, துன்பம், அடிமைத்தனம், அழிவு போன்றவற்றின் சின்னமாகக் கருதப்படுகிறது.

இருட்டை விரும்புகிறவர்கள் கள்வர்களும், காமுகர்களுமே என்று கூறுவார்கள். இதற்கு மாருக ஒளி அனைவராலும் விரும்பப் படுகிறது. ஒளி தோன்ற இருள் மறைந்து உயிர்கள் மகிழ்கின்றன. உற்சாகம் பிறக்கின்றது.

ஒளி வாழ்வின் சின்னம். ஒளியில் இருள் இருக்க முடியாது. அழுக்குப்பட முடியாது. அனைத்தையும் தூய்மைப்படுத்திவிடும். ஒளி தன்னிலையில் தூய்மையானது. அனைவருக்கும் வாழ்வு தருவது. இதஞல் தான் பழந்தமிழ் மக்கள் ஒளி வடிவில் இறைவனை வழிபட்டனர்.

'அருட்பெரும் சுடரே' என்றும் 'சோதி வடிவானவனே' என்றும் சொல்லிச் சொல்லி உருகினர்.

'ஒளியாம் இறையே வாராய் என்று நாம் ஆலயத்தில் குரலெழுப்பிப் பாடுகிறோம்.


ஒளி பற்றிய அறிவியல் கருத்துக்கள் இன்று பரந்த அளவில் வளர்ந்துள்ளன. ஒளி இயல் என்று ஒரு தனித்துறையே ஏற்பட்டுள்ளது. ஆஞல் எமது முன்ஞேர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஒளி பற்றிய உண்மைகளை, அதன் மர்மங்களை எல்லாம் அறிந்திருந்தனர். ஒளி இம்மைக்கும் மறுமைக்கும் துணையானது என்று நம்பினர். அண்டமெலாம் நிறைந்த பேரொளி நம் உடலினுள் உறைந்திருப்பதை அறிந்து அதை ஒழுங்கு படுத்தி, வளர்த்துப் பயனடையும் வழிகளை தியான - யோக முறைகளில் கண்டனர்.

எமது வேத நூல் இறைவனைப் பேரொளி வடிவினஞக் காட்டுகிறது.

சீஞய் மலையிலே இறைவன் மோயீசனுக்கு முட்செடியில் எரியும் நெருப்பு வடிவில் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கொடுத்தார் என்று வேத நூல் கூறுகிறது. பிறிதொரு இடத்தில் பாலைவனத்தில் நடந்து சென்ற மக்களுக்கு இரவில் இறைவன் நெருப்புத் தூணாக நின்று வழிகாட்டியதாகப் படிக்கின்றோம். மூவொரு கடவுளில் ஒருவராகிய பரிசுத்த ஆவியை அக்கினி நாக்குகளாக வேதாகமம் காட்டுகிறதல்லவா?

பண்டைய பபிலோனிய, சுமேரிய, எகிப்திய மக்களிடத்தில் ஒளி வழிபாடு இருந்ததாக அறியமுடிகிறது.

ஒளியின் இருப்பை, அதன் இன்றியமையாத் தன்மையை, அதன் சிறப்பை, பண்புகளை அறிந்த மனிதன் ஒளி வடிவில் இறைவனைக் காண விரும்பினான், கண்டான்.

உலகின் இருளை அகற்ற வந்த கிறீஸ்து பிறந்தபோது வானிலே ஒளி தோன்றியது. அவ்வொளி இயேசுவின் இறைத்தன்மையை, ஒளி வடிவான இறைவன் மண்ணிலே மலர்ந்து ஒளிர்வதைச் சொல்லாமல் சொல்லுகிறதோ!

இந்தக் கருத்து பிற்காலத்தில் இயேசுவின் வார்த்தைகளில் இன்னும் தெளிவானது.

'நானே உலகின் ஒளி. என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்' என்று ஆலயத்திலே மக்கட் கூட்டத்தைப் பார்த்து முழங்கிய போது இயேசுவில் ஒளி வடிவான இறைவனைக் காண முடிகிறது.

கிறீஸ்துவுக்கு முன் பிறந்த கிரேக்கத் தத்துவ ஞானியான சோக்கிறட்டீஸ் ஒருமுறை பட்டப் பகலில் கையில் விளக்கேந்தி வீதியால் சென்று கொண்டிருந்தாராம். இதைப் பார்த்தவர் நகைத்தனர். கேட்டனர். அவர் கூறினார். 'நான் மனிதனைத் தேடுகிறேன்'

உலகில் உள்ளங்கள் இருளாக இருந்ததால் அவர் மனிதனை, ஒளி கொண்டு தேடினார். 'நானே உலகின் ஒளி' என்ற இயேசு வாழ்ந்த காலத்தில் அவர் வாழ்ந்திருந்தால் பட்டப்பகலில் விளக்கேந்தும் அவசியம் அவருக்கு வந்திருக்காது. உலகில் ஒளிர்ந்த இயேசுவெனும் ஒளியை அவர் தெளிவாகக் கண்டிருப்பார்.

ஆம் 'இயேசு உலகின் ஒளி'. உலகை ஒளிர்விக்க வந்த ஒளி. பரிதியின் ஒளி பட்டு பாலொளி தரும் நிலவு போல் இயேசுவின் ஒளி பட்டுஉள்ளங்கள் ஒளிர வேண்டும்; உலகை ஒளிர்விக்க வேண்டும்.

இன்றைய உலகம் ஒளி பெறத் தவிக்கின்றது. மனிதனைப் பல் வேறு இருட்திரைகள் கவிந்துள்ளன. அரசியல், சமூக, சமய, பொருளாதார, கலாசார ரீதியாக ஒர் இருண்ட சூழலிலிருந்து விடுபட முடியாது, வெளியேற முடியாது தவிக்கின்ற உலகுக்கு ஒவ்வொரு மனிதனும் சிறப்பாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒளியாக நின்று வழிகாட்ட வேண்டும்.

'நானே உலகின் ஒளி' என்ற இயேசு பின் 'நீங்கள் உலகின் ஒளி' உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக என்று ஆணையிட்டார். எப்படி ஒளிர்வது என்ற கேள்விக்கு 'உங்கள் நற்செயல்களால்' என்ற இயேசுவின் குரல் விடையாகிறது.

பேரொளி வடிவான இறைவனை - அவர் திருமகனை இயேசுவை அறிந்து, அவர் காட்டும் பாதையில் உள்ளொளி பெற்று' உலகில் ஒளிர்ந்தால் உலகமே ஒளிரும். எங்கும் இன்பமும் அமைதியும் விளங்கும். **எம். வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 13

புனித சின்னப்பர் எழுதிய மடல்களுள் மிக நீளமானது உரோமை யருக்கு எழுதிய மடலாகும். உரோமையில் இருந்த கிறிஸ்தவர்களில் பலர் பிறப்பால் யூதர்கள். எனவே தான் அவரது இந்த மடலில் யூதர்கள் நன்கறிந்த பழைய ஏற்பாட்டின் பல மனிதர்கள் குறிப்பிடப்படுகின்றனர். பின்வரும் தகவல்களின் துணையுடன் அவர்களை இனம் காணுங்கள்.

1. 'எஞ்சியிருப்பவன் நான் ஒருவனே என் உயிரையும் பறிக்கத் தேடுகின்றனர்' எனக் கூறியவர் ..........................................

2. வரவிருந்தவர்க்கு முன்னடையாளம் ..........................................

3. வாக்குறுதியின்படி பிறந்த பிள்ளை ..........................................

4. 'அன்பு செய்யப்படாதவளை அன்பு செய்யப்பட்டவள் என அழைப்பேன்' என இறைவன் இவர் மூலம் கூறுகிறார் ..........................................

5. இரட்டைக் குழந்தைகளைக் கருத்தாங்கியவள் ..........................................

6 எவனுக்கு இரக்கம் காட்ட விரும்புகிறேனோ அவனுக்கு இரக்கம் காட்டுவேன். எனக்கடவுளால் கூறப்பட்டவர் ..........................................

7. விசுவாசத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவரானவர் ..........................................

8. 'உன் வழியாய் என் வல்லமையைக் காட்ட நான் உன்னைத் தோற்றுவித்தேன்' எனக் கூறப்பட்டவர். ..........................................

9. யாருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டனவோ அவர்கள் பேறுபெற்றோர்' எனக் கூறியவர் ..........................................

10. 'குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வருவேன். அப்பொழுது இவள் ஒரு மகனுக்குத் தாயாய் இருப்பாள் என்று குறிப்பிடப்பட்டவர். ..........................................

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

பரிசு: ரூபா 50/-, 25/- முடிவுத்திகதி: 30 - 09 - 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விவிலியப் புதிர் 11
## முடிவுகள்

1. பெரும்பாட்டினுல் வருந்திய பெண்
2. 10 தொழு நோயாளிகள்
3. பேய் பிடித்தவனும் பன்றிக் கூட்டமும்
4. 38 ஆண்டுகள் பிணியுற்றிருந்த ஒருவன்
5. ஐந்து அப்பம் பலுகியது.
6. புயலை அடக்கியது.
7. யாயீருடைய மகள்
8. தண்ணீரை இரசமாக்குதல்
9. லாசரை உயிர்ப்பித்தல்
10. பேயால் நோயுற்ற பெண்

### பரிசு பெறுவோர் :

**1ம் பரிசு**

**செல்வி. சாந்தி மைக்கல்**
7, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.

**2ம் பரிசு**


**சுதா யேசுதாசன்**
312, 'மஞ்சணம்'
பழைய கல்முனை வீதி, நாவற்குடா
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர் :

1. **T. ஞான சௌந்தரி**
பாடசாலை வீதி, குருக்கள் மடம்.
2. **பிறிசில்லா பிறிசாந்தினி லோப்பஸ்**
26/4, 3ம் குறுக்குத் தெரு,
இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.
3. **A. மஞ்சுளா**
4/4, 3ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
4. **A. A. பொற்செல்வி**
20, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.
5. **செல்வி. கரோலின்ஸ் லோறன்ஸ்**
9 ,மணி ஒழுங்கை, ஊறணி,
மட்டக்களப்பு.

பங்குபற்றியவர் : 28
சரியான விடைஅளித்தோர் : 21

தபாற் சீர் குலைவு போட்டியாளர்களையும் குலைத்து விட்டது போல் தெரிகிறது. இம்முறை குறைந்த தொகையினரேபங்குபற்றியுள்ளனர். மேலும், மேலும் அதிக எண்ணிக்கையில் போட்டியில் கலந்து விவிலிய அறிவை பெருக்குவதோடு, பரிசையும் வெல்லுங்கள் என்று அழைப்பு விடுக்கிறோம். (ஆ ர்)



## எலக்ரோனிக் பைபிள்

''எலக்ரோனிக் பைபிள்'' விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. ஆரம்ப காலத்தில் பைபிளானது, செம்மறியாட்டின் தோலிலேயே எழு த ப் ப ட் ட து. அதைத் தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து பைபிள் புதிதாக உருப்பெற்றது. இன்று பைபிளானது சிறியதொரு 'கல்குலேட்டர்' அளவில் வெளிவர இருக்கிறது.

பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களினதும் சாரம், அந்த கல்குலேட்டரின் 200 அலகுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளது. சிறிய பேப்பர் பையொன்றைப் போன்றதே இதன் அமைப்பாகும்.

அதனை முறையாக இயக்குவதன் மூலம் தேவைப்படும் வசனத்தை அந்த ''கல்குலேட்டரின்'' இரண்ட ங் கு ல த் திரையில் பார்க்கலாம்.

வாக்கியத்தின் நான்கு வசனங்கள் அந்தத் திரையில் விழும் புதிய ஏற்பாட்டின் வசனம் ஒன்றை வாசிக்க வேண்டுமென்றால் அதற்குரிய 'பட்டனை' அழுத்தினுல் புதிய ஏற்பாட்டின் வசனம் திரையில் விழும்.

அமெரிக்காவில் இவற்றை இவ்வருடம் முதல் சந்தையில் விடுவதற்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:
**செல்வி. சுதர்ஷினி இருதயம்**
நன்றி - வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## சிந்தனை விருந்து

'நம்மைச் சுற்றி நடக்கும் அவலங்களை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என்ற கட்டுரை சிந்திக்கத் தூண்டியது. வறுமை ஒழிப்புக் கட்டுரையும் சிறப்பாக இருந்தது.

**ஜெனவி. P**
முருங்கன்

## என்னென்னவோ வந்து...

திங்களுக்கொரு முறை மலரும் தொண்டனைப் படிக்கும் தோறும் பல உணர்ச்சிகள் தோன்றுகிறது. இக்காலத்திற்கும், மக்களின் மனோ நிலைக்கும் பொருத்தமாகக் குரல் கொடுப்பதோடு, சுட்டிக்காட்டவும் படுகின்றன.

**மார்க் ஜோர்ஜ்**
தாளங்குடா

## கவர்ச்சி வேண்டும்

தொண்டன், வைரந்தான் ஆனல் இன்னும் தீட்டப்படவேண்டும். அதாவது கவர்ச்சி இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். ஓவியப் பஞ்சம் தெரிகிறது. வேத வழியைக் காட்டுவதோடு வேடிக்கை அம்சங்களும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**'மன்னுயில்' P. செல்வம்**
மட்டக்களப்பு

## உண்மைக் குரல்

ஜூலைத் தொண்டனில், சமாதானத்தை இழந்து பரிதவிப்பதற்குக் காரணம் நம்மத்தியில் ஒற்றுமை இல்லாததே என்பதைத் தெட்டத் தெளிவாக 'எமது குரல்' பகுதியில் கூறியுள்ளமை பாராட்டுக்குரியதே!

**திருமதி. மேரி மாக்கிறற் அருளப்பு**
அம்பாறை

## பாராட்டு

'ஜனசவிய ஒரு நோக்கு' என்ற கட்டுரையின் வாயிலாகப் பல பயனுள்ள தகவல்களை அறிய முடிந்தது. கட்டுரை ஆசிரியருக்கு எமது பாராட்டுக்கள்!

இருக்குமிடத்தில்... உருவகக்கதையும், உன்னை நான் சந்தித்தேன் சிறுகதையும் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளன.

**செல்வி. கலிஸ்ரா அருளப்பு**
தாளங்குடா- 3

## உருவகம் நன்று

ஜூலைத் தொண்டனில் இடம்பெற்ற உருவகக் கதை நன்றாக இருந்தது. அதை எழுதியவருக்கு பாராட்டுக்கள்

**அ. ஜெரி. ஊ. ரொபின்**
பாலையூற்று

## நெஞ்சைத் தொட்டது

ஆவணி மாதத் தொண்டன் பார்த்தேன். அட்டை முன்புறத்தில் தமிழர் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் படம் பொறிக்கப்பட்டிருந்ததுடன் அவர்தம் பிரிவை ஒட்டி பண்பட்ட கவிஞரான எருவில் மூர்த்தி வரைந்த கவிதையும் நெஞ்சைத் தொட்டது.

மேலாக, துணிவு, மனிதாபிமானம் நடுவுநிலைமை, உண்மை இவைகள் தவறாது தீட்டப்பட்ட ஆசிரியத் தலையங்கம் பாராட்டற் பாலது.

**நிலாதமிழின்தாசன்**
நிலாவெளி - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்

நாள்: 3 - 9 - 89

நேரம்: மாலை 7 . 00 மணி

புதிய உலகம்

★ மீட்பின் காவியம்
(இயேசு காவியப் பாடல்கள்)
இசை நாடா அறிமுகம்
★ விவிலியப் போட்டி 3

நாள்: 9. 10, 11 - 9 - 89

நேரம்: காலை 5 . 50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்: அருள் சகோ.
S. A. I. மத்தியு அவர்கள்

நாள்: 12 - 9 - 89

நேரம்: மாலை 6. 45 மணி

சிறுவர் உலகம்

★ மண்ணிலிருந்து மனிதன்
(விவிலிய நாடகம்)

எழுதியவர்: கலைமணி

நாள்: 17 - 9 - 89
நேரம்: மாலை 7 . 00 மணி

புதிய உலகம்

★ அழைத்தல் - உரையாடல்
எழுதியவர்: திருமதி. ஞேஸ் ஜோசப்

நாள்: 23, 24, 25 - 9 - 89
நேரம்: காலை 5. 50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்: அருள் சகோதரி.
டெலாறேஸ்

நாள்: 26 - 9 - 89
நேரம்: மாலை 6. 45 மணி

சிறுவர் உலகம்

★ புனித வின்சன்ற் டீ போல்
(உரையாடல்)
எழுதியவர்: திருமதி. அகுஸ்தீன்

நிகழ்ச்சித்தொகுப்பு: மலர்வேந்தன்

நேயர்களே! நிகழ்ச்சிகளைக் கேட்டு, உங்கள் கருத்துக்களைத் தவறாது எழுதுங்கள்.

இணைப்பாளர். கத்தோலிக்க
வானொலி நிகழ்ச்சிகள் (தமிழ்)
த. பெ. எண் 44
மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 28 - 8 - 89ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media